மதுரைக்கூடலூர்கிழார்

இயற்றிய

# முதுமொழிக்காஞ்சி.

வை. மு. சடகோபராமாநுஜாசாரியரும்,

சே. கிருஷ்ணமாசாரியரும்

இயற்றிய உரையுடன்

சென்னைப் புரசை

நே. முனிசாமிமுதலியாரவர்களது

கணேச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிக்ரு [illegible]

விலை அணா - -

ஸ்ரீ

# முதுமொழிக்காஞ்சி.

## 1-வது சிறந்தபத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.
2. காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
3. மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.
4. வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.
5. இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.
6. நலனுடை மையி னாணுச் சிறந்தன்று.
7. குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.
8. கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
9. செற்றாரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று.
10. முற்பெரு கலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று.

## 2-வது அறிவுப்பத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரிற் பிறந்தமை யீரத்தி னறிப.
2. ஈர முடைமை யீகையி னறிப.
3. சோரா நன்னட் புதவியி னறிப.
4. கற்ற துடைமை காட்சியி னறிப.
5. ஏற்ற முடைமை யெதிர்கோளி னறிப.
6. சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப.
7. குத்திரஞ் செய்தலிற் கள்வதனை லறிப.
8. சொற்சோர் வுடைமையி னெச்சோர்வு மறிப.
9. அறிவுசோர் வுடைமையிற் பிறிதுசோர்வு மறிப.
10. சீருடை யாண்மை செய்கையி னறிப.

## 3-வது பழியாப்பத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
யாப்பி லோரை யியல்புகுணம் பழியார்.
2. மீப்பி லோரை மீக்குணம் பழியார்.

4. முறையி லரசர் நாட்டிருந்து பழியார்
5. பெருமை யுடையத னருமை பழியார்.
6. அருமை யுடையதன் பெருமை பழியார்.
7. செயத்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார்.
8. அறியாத தேசத் தாசாரம் பழியார்.
9. வறியோன் வள்ளிய னன்மை பழியார்.
10. சிறியா ரொழுக்குஞ் சிறந்தோரும் பழியார்.

4–வது துவ்வாப்பத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது.
2. கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது.
3. நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது.
4. பேணி லீகை மாற்றலிற் றுவ்வாது.
5. செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது.
6. பொய்வே ளாண்மை புலைமையிற் றுவ்வாது.
7. கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது.
8. அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது.
9. இழிவுடை மூப்புக் கதத்திற் றுவ்வாது.
10. தாளு ரின்புற றனிமையிற் றுவ்வாது.

5–வது அல்லபத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
நீரறிந் தொழுகாதா டார மல்லள்.
2. தாரமா ணுதது வாழ்க்கை யன்று.
3. ஈரமல் லாதது கிளைநட் பன்று.
4. சோரக் கையன் சொன்மலை யல்லன்.
5. நேரா நெஞ்சத்தோ னட்டோ னல்லன்.
6. தேராமற் கற்றது கல்வி யன்று.
7. வாழாமல் வருந்தியது வருத்த மன்று.
8. அறத்தாற்றி னீயாத தீகை யன்று.
9. திறத்தாற்றி னோலா ததுநோன் பன்று.
10. மறுபிறப் பறியா ததுமூப் பன்று.

6–வது இல்லைபத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை.

2. ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை.
3. வாய்ப்புடை வழக்கி னல்வழக் கில்லை.
4. வாயா வழக்கிற் றீவழக் கில்லை.
5. இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை.
6. உரையில னாதலிற் சாக்கா டில்லை.
7. நசையிற் பெரியதோர் நல்குர வில்லை.
8. இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை.
9. இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.
10. இரப்போர்க் கீதலி னெய்துஞ்சிறப் பில்லை.

7—வது பொய்ப்பத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரறிவி னோனினிது வாழாமை பொய்.
2. பெருஞ்சீ ரோன்றன் வெகுளியின்மை பொய்.
3. கள்ளுண் போன்சோர் வின்மை பொய்.
4. கால மறியாதோன் கையுறல் பொய்.
5. மேல்வர வறியாதோன் றற்காத்தல் பொய்.
6. உறுவினை காய்வோ னுயர்வுவேண்டல் பொய்.
7. சிறுமைநோ னாதோன் பெருமைவேண்டல் பொய்.
8. பெருமைநோ னாதோன் சிறுமைவேண்டல் பொய்.
9. பொருணசை வேட்கையான் முறைசெயல் பொய்.
10. வாலிய னல்லாதோன் றவஞ்செய்தல் பொய்.

8—வது எளியபத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
புகழ்வெய் யோர்க்குப் புத்தே ணாடெளிது.
2. உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது.
3. ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை யெளிது.
4. குறளைவெய் யோர்க்கு மறைவிரி யெளிது.
5. துன்பம் வெய்யோர்க் கின்ப மெளிது.
6. இன்பம்வெய் யோர்க்குத் துன்ப மெளிது.
7. உண்டி வெய்யோர்க் குறுபிணி யெளிது.
8. பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி யெளிது.
9. பாரம்வெய் யோர்க்குப் பாத்தூ ணெளிது.
10. சார்பி லோருக் குறுகொலை யெளிது.

## 9–வது நல்கூர்ந்தபத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
முறையி லரசனுடு நல்கூர்ந் தன்று.
2. † * * * *
3. செற்றுட னுறைவோனைச் சேர்தனல் கூர்ந்தன்று.
4. பிணிகிடந் தோன்பெற்ற வின்பநல் கூர்ந்தன்று.
5. தற்போற் றுவழிப் புலவிநல் கூர்ந்தன்று.
6. முதிர்வுடை யோன்மேனி யணிநல் கூர்ந்தன்று.
7. சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று.
8. அகம்வறி யோனண்ண னல்கூர்ந் தன்று.
9. உட்கில் வழிச்சின நல்கூர்ந் தன்று.
10. நட்பில் வழிச்சேற னல்கூர்ந் தன்று.

## 10–வது தண்டாப்பத்து.

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓங்கல் வேண்டுவோ னுயர்மொழி தண்டான்.
2. வீங்கல் வேண்டுவோன் பலபுகழ் தண்டான்.
3. கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.
4. நிற்றல் வேண்டுவோன் றவஞ்செய றண்டான்.
5. வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.
6. மிகுதி வேண்டுவோன் றகுதி தண்டான்.
7. இன்பம் வேண்டுவோன் றுன்பந் தண்டான்.
8. துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.
9. ஏமம் வேண்டுவோன் முறைசெய றண்டான்.
10. ‡ * * * *

---

† 2. மிகமூத்தோன் காம நல்கூர்ந் தன்று.

(இ - ள்.) மிக மூத்தோன் - மிகவும் வயது முதிர்ந்தவன் [கிழவன்], காமம் - காமவின்பத்தை விரும்பி அனுபவித்தல், நல்கூர்ந்தன்று - வறுமையுடையதாம்; (எ - று.) (அஉ)

‡ 10. காமம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

(இ - ள்.) காமம் வேண்டுவோன் - (மகளிரது புணர்ச்சியாலுண்டாகும்) காமத்தின்பத்தை விரும்புகிறவன், இன்பம் - அவ்வின்பத்தினின்று, தண்டான் - நீக்கான் [அதற்குஉரியசெயல்களையே செய்வன் என்றபடி]; (எ-று.).

# முதுமொழிக்காஞ்சி.

செந்தமிழ்ப்பரமாசாரியராகிய அகத்தியமகாமுனிவரது மாணாக்கர்களான தொல்காப்பியர் முதலிய பன்னிருவராலும் இயற்றப்பட்ட பன்னிருபடல மென்னும் புறப்பொருளிலக்கண நூலின் வழிநூலாக ஐயனாரிதனார் செய்த புறப்பொருள்வெண்பாமாலையிற் காணப்படுகின்ற புறப்பொருள் திணை பன்னிரண்டனுட் பத்தாவதாகிய பொதுவியலில் 'காஞ்சிப் பொதுவியற்பால' என்று குறிக்கப்பட்ட ஆறுதுறைகளுள், முதுமொழிக்காஞ்சி யென்பது, முதலாவதாகும். அங்கு "மூதுரை பொருந்திய முதுமொழிக்காஞ்சி" என்று சிறப்பித்துக்கூறப்பட்ட அத்துறையின் இலக்கணம்:—"பலர் புகழ் புலவர் பன்னின தெரியும், உலகியல் பொருண்முடி புணரக் கூறின்று." (இதன்பொருள்: எல்லாருங்கொண்டாடும் அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்தபொருளாகிய அறம்பொருளின்பத்தை அறியச்சொல்லியது என்றவாறு.) வரலாறு: "ஆற்றி னுணரி னருளறமா மாற்றார்க்குப், போற்றார்வழங்கிற் பொருள் பொருளாம் - மாற்றிப், புகலாதொழுகும் புரிவளையார் மென்றோ, ளகலா தளித்தொழுக லன்பு". (இ - ள். நெறியான் அறியின், அருள் தன்மமாகும்; வறியவர்க்குப் பரிகரியாராய்க் கொடுப்பின், பொருள் பொருளாம்; மாறிவிரும்பாது ஒருநெறிப்படநடக்கும் முறுக்குவளையினையுடையோர்தம் மெல்லியதோளை நீங்காதே அளித்துநடக்குமது காதலாம்; எ - று.) எனக் காண்க. சார்புநூலாகிய இலக்கணவிளக்கத்திற் புறத்திணையியலில், "ஏதமி லறமுதலியல் பிவை யென்னும், மூதுரை பொருந்திய முதுமொழிக்காஞ்சி" என்றதும் காணத்தக்கது. இத்துறைகொண்ட செய்யுள்கள் ஐந்து, புறநானூற்றில்வந்துள்ளன.

அறம்பொருளின்பமென்னும் மூன்றுபொருள்களையும் விளங்கக்கூறியிருக்கின்ற இந்நூல்முழுவதிலும், மேற்கூறிய பொதுவியற்றிணையிலடங்கிய முதுமொழிக்காஞ்சி யென்னுந் துறை அமைந்திருத்தலால், இந்நூல் அப்பெயரதாயிற்று. ஆகவே, "முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" என்று கூறப்பட்ட நூற்பெயர்வகைகளுள் நுதலியபொருளாற் பெயர்பெற்றது இதுவென்று அறிக. (நுதலிய பொருள் - கூறப்பட்ட விஷயம்.) இந்நூலில் "ஓதலிற்சிறந்தன்றொழுக்கமுடைமை" என்றாற்போல்வன அறத்தின்மேலனவும், "முற்பெருகலிற் பிற்சிறுகாமை சிறந்தன்று" என்றாற்போல்வன பொருளின்மேலனவும், "தாரமாணாதது வாழ்க்கையன்று" என்றாற்போல்வன இன்பத்தின்மேலனவுமாதல் கண்டுகொள்க.

புறப்பொருள்திணை பன்னிரண்டனுள், பொதுவியலாவது - வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்கிறவொன்பதினிடத்து இயைவனவாதலாற் பொதுவும் அவற்றிற்கூறுதொழிந்தனவு மாகிய இலக்கணங்களைக் கூறுவது. வெட்சிமுதல் தும்பையீறாகவுள்ள ஏழும் புறப்பொருளென்றும், வாகை பாடாண் பொதுவியல் என்ற மூன்றும் புறப்புறப்பொருளென்றுங் கூறுதலு முண்டு.

புறப்பொருள்வெண்பாமாலையின்படி, காஞ்சித்திணையாவது - போர் செய்தற்குவந்த பகைவர்க்கு எதிர்சென்று ஊன்றுதல்; (ஊன்றுதல் - தனது காவலிடத்தைக்காத்தல்:) "உட்கா, தெதிரூன்றல் காஞ்சி" என்றார் பிறரும். இதற்குக் காஞ்சிப்பூ அல்லது காஞ்சிப்பூமாலை சூடுதல் உரியது; ('வேஞ்

சின மாற்றான் விடுதர வேந்தன், காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று" என்பது, புறப்பொருள்வெண்பாமாலை.) ஆகவே, காஞ்சியென்பது - காரணப்பெயராயிற்று. இக்காஞ்சித்திணை, பகைவரதுநாட்டைக் கவர்ந்துகொள்ளநினைத்துப் போர்செய்தற்குஅவர்மேற்செல்லுத லாகிய வஞ்சித்திணைக்கு மறுதலைத்திணை யெனப்படும்; ("வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே" என்பது, பன்னிருபடலம்.) காஞ்சித்திணைக்குரிய துறைகள் இருபத்தொன்றனுள் பெருங்காஞ்சி, வஞ்சினக்காஞ்சி, தலைக்காஞ்சி, மறக்காஞ்சி, பேய்க்காஞ்சி, தொட்டகாஞ்சி, தொடாக்காஞ்சி, மன்னைக்காஞ்சி, கட்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி,மகட்பாற்காஞ்சி எனப்பெயர்பெற்றன உள. இவ்வகைச்சிறப்புப்பெயர்கொண்டு வேறுபொருளின்மேல் வந்ததனால், முதுமொழிக்காஞ்சி யென்பது - காஞ்சித்திணையில் அடங்காது, பொதுவியற்றிணையிற் சேர்ந்து 'காஞ்சிப்பொதுவியற்பால' என்றவற்றில் நிறுத்தப்பட்டது;பெருங்காஞ்சி, பொருண்மொழிக்காஞ்சி, முதுகாஞ்சி யென்பனவும் அத்தன்மையன. (இளமைகழிந்து அறிவுமிக்கோர் இளமைகழியாத அறிவின்மாக்கட்குக் கூறுவது முதுகாஞ்சியாம்.)

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார், வீடுபேறுநிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது காஞ்சித்திணை யென்றும், அது பொருந்தாக்காமமாகிய பெருந்திணைக்குப் புறனென்றுங் கூறி, அதன் பகுதிகளை விரித்து ஓதுவர். ("காஞ்சிதானே பெருந்திணைப்புறனே","பாங்கருஞ்சிறப்பிற் பல்லாற்றானும், நில்லாவுலகம்புல்லியநெறித்தே" என்றவை முதலாகக் காண்க.) பத்துப்பாட்டினுள் ஆறாவதான மதுரைக்காஞ்சியென்னும் நூல்,வீடுபேறுநிமித்தமாகச் சான்றோர் பல்வேறுநிலையாமையைக்கூறியதாதலால்,அதற்குஉதாரணமாம். மற்றும்,தொல்காப்பியத்துச்செய்யுளியலில் முதுமொழியிலக்கணம்"நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடைமையும், மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்,குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம், ஏது நுதலிய முதுமொழி யென்ப" என்று கூறப்பட்டுள்ளது. கூரிதாய்ச் சுருங்கி விழுமிதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்தபொருளொன்றனை முடித்தற்குவருவது முதுமொழி யென்பதாம். ஆகவே, உலகத்துப்பொருள்களின் நிலையின்மையைக் கருதி,நுட்பமானபொருளின்மேலனவும், சொற்சுருங்கியனவும்,சிறந்தபொருளைத்தருவனவும், எளிதிற்பொருள்விளங்குவனவுமான முதுமொழிகளைக்கொண்டு பற்பலநீதிகளைக்கூறியது முதுமொழிக்காஞ்சி யெனவும் பொருள்கொள்ளலாம். '"ஓதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை" என்பது இரண்டடியின்றி முதுமொழியாகலானும்' என்பது தொல்காப்பியவுரை. முதுமொழி, மூதுரை, முதுசொல் என்பன - ஒரு பொருட்சொற்கள்: ("மூதுரை பொருந்திய முதுமொழிக்காஞ்சி" என்றார் புறப்பொருள்வெண்பாமாலையில்; "அங்கத முதுசொல்லோ டவ்வேழ்நிலத்தும்," "ஏதுநுதலிய முதுமொழியான" என்றனர் தொல்காப்பியனார்.) முதுமொழி - முதுமையான மொழி: சொற்பொருட்சுவைகளில் முதிர்ந்த மொழி; பண்புத்தொகை. முதுமை + மொழி = முதுமொழி: [நன் - பத - கூ, உயிர் - அ.] மொழி + காஞ்சி=மொழிக்காஞ்சி: [நன் - உயிர்-கடு.] 'மொழிக்காஞ்சி' என்ற தொடர்க்குப் பொருட்புணர்ச்சி, அந்தந்தப்பொருளுக்குஏற்றபடி அமைத்துக்கொள்ளவேண்டும்.

இனி, மகளிரிடையணிகளுள் ஒருவகையானது, காஞ்சி யெனப்படும். (மேகலை, கலாபம், பருமம், விரிசிகை முதலியன-அவ்விடையணியின் வேறுவகைகள்.) இப்பொருளில்,காஞ்சீ யென்ற வடசொல் ஈறுகுறுகிற்று. "எண்கோவை காஞ்சி" என்றும், "காஞ்சி யெழுகோவை" என்றும், "காஞ்சி யிருகோவை" என்றும் தமிழ்நூல்களில் வேறுபடக் காணப்படினும், ஒருவடமாகவுள்ளது காஞ்சி யென்றல்,வடநூற்கொள்கை; ("ஏகயஷ்டிர் பவேத்

காஞ்சி" என்பர்.) ஆகவே, பலமணிகளை ஒருவடமாகக்கோத்த காஞ்சியென்னும் மகளிரிடையணிபோலப் பலமுதுமொழிகளை ஒழுங்குபடக்கோத்ததொரு நூல் முதுமொழிக்காஞ்சி யெனப் பெயர்பெற்றதென்று பொருள் கொள்ளுதலும் சாலும். (மும்மணிக்கோவை, வருக்கக்கோவை, அகப்பொருட்கோவை, ஆசாரக்கோவை யென்பன சிலதமிழ்நூற்பெயர்களாதலும், இரத்தினமேகலை யென்பது வடநூலுரையொன்றன் பெயராதலும், இங்கு ஒப்புநோக்கத்தக்கன.)

இந்நூல், நூறு முதுமொழிகளை யுடையது; (அடிவரையறையில்லன வெனப்படும் ஆறனுள் முதுமொழி யொன்றாம். அது ஓரடியாலும் ஒரோவிடத்து இயலும்.) பப்பத்துவாக்கியங்களைக் கொண்ட 'சிறந்தபத்து' முதலிய பத்துப் பத்தாகப் பகுக்கப்பட்டுள்ளது, இந்நூல். (ஐங்குறுநூற்றில் ஒவ்வொருநூறும் இங்ஙனம் பத்துப் பத்தாகப் பகுக்கப்பட்டிருத்தல் காண்க.)

பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் இம்முதுமொழிக்காஞ்சிக்கு உள்ள சிறப்பு, முன்புகாட்டிய "நாலடி நான்மணி" என்ற தொடக்கத்துப் பழஞ்செய்யுளில் இந்நூலுக்குமாத்திரம் 'இன்னிலைய' என்ற அடைமொழி கொடுத்துச் சிறப்பித்திருத்தலால் நன்குவிளங்கும். இந்நூலின் வாக்கியங்கள் பெரும்பாலும் எதுகை மோனைநயஞ் சிறந்திருத்தல் காணத்தக்கது. சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்குஇனிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழம்உடைத்தாதல், உலகமலையாமை, விழுமியது பயத்தல் முதலிய நூலழகுகள்பலவற்றையும் இந்நூலொன்றிலே காணலாம். தொல்காப்பியத்துச் செய்யுளியலில் "வனப்பியல்தானே வகுக்குங்காலைச், சின்மென்மொழியால் தாயபனுவலோடு, அம்மைதானே அடிநிமிர்பின்றே" என்ற சூத்திரத்தால், 'சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டுவந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம்' என்றுகூறிய அம்மையென்னும் இலக்கணம் அமைந்தது இந்நூலெனஅறிக. அச்சூத்திரவுரையில் 'அஃதாவது - பதினெண்கீழ்க்கணக்கு எனவுணர்க' என்றதும் அறியத்தக்கது.

இந்நூல் இன்னநூலின்வழியேதோன்றியதென்று கொள்ள இடமில்லாமையால், முதனூல் வழிநூல் சார்புநூல் என்ற நூல்வகைமூன்றில் முதனூலின்பாற்படும்.

நச்சினார்க்கினியர் முதலிய பழையஉரையாசிரியர்களால் இந்நூல் எடுத்தாளப்பட்டுள்ளது.

இந்நூற்குப் பழையவுரையொன்று உண்டு; * அது பொழிப்புரையாக அமைந்தது. அதனையியற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை.

## நூலாசிரியர்.

இந்நூலை இயற்றியவர் மதுரைக் கூடலூர்கிழார் என்பது, இந்நூலினிறுதியில்'மதுரைக்கூடலூர்கிழார் செய்த முதுமொழிக்காஞ்சி முற்றிற்று' என்று ஏட்டுப்பிரதிகளிலுள்ளதனால் விளங்கும்.

இவரது பெயரினால், கூடலூரிற் பிறந்து பாண்டியநாட்டிராசதானியான மதுரையில் வாழ்ந்தவரிவரென்பது தோன்றும். இங்குக்குறித்த கூடலூரென்பது இன்னதென்று துணியக்கூடவில்லை. சேரநாடு சோழநாடு நடுநாடு தொண்டைநாடு இவைஒவ்வொன்றிலும் இப்பெயர்கொண்ட ஊர் உளதென்று தெரிகிறது. நான்மாடக்கூட லென்றும்,மாடக்கூடலென்றும்,கூட லென்றும் வழங்கப்படுகின்ற மதுரைத்தலமென்று கொள்ளின், மதுரையென்ற அடைமொழி பயனின்றிநிற்குமாதலின், அங்ஙனங்கொள்ளுதல் சிறவாது.

* அந்தப்பழையவுரையும், சிலஏட்டுப்பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து இப்புத்தகத்தில் ஆங்காங்கு அமைத்து அச்சிடப்பட்டுள்ளது.

'கிழார்' என்ற பெயரினால்,வேளாளவருணத்தவரிவரென விளங்கும்; தொல்காப்பியத்து மரபியலில் "ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும், யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே" என்ற சூத்திரத்தி னுரையில் 'அம்பர்கிழான்நாகன், வல்லங்கிழான்மாறன் என்பன வேளாளர்க்கு உரியன' என்றது காணத்தக்கது: 'சேக்கிழார்' என்றதும் அது. மற்றும், தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத்திற் பெயரியலில் "உடைப்பெயர்"க்கு [தனது உடைமையாற்பெற்ற பெயர்க்கு] அம்பர்கிழான், பேரூர்கிழான் என்பவற்றை உதாரணமாகக்காட்டியிருத்தலை நோக்குமிடத்து, 'கூடலூர்கிழார்' என்பதற்கு - கூடலூரைத் தனதுஉடைமையாகப்பெற்றவ ரென்றும் பொருள்கொள்ளலா மென்று தெரிகின்றது. கிழார்=கிழவர்: உரியவர்; கிழமையென்ற பண்பினடியாப் பிறந்த பலர்பாற்பெயர்: பன்மை,உயர்வுபற்றியது. சிறுவரை 'சிறார்' என்றல்போல, கிழவரை 'கிழார்' என்றல் வழக்கு. (அரிசில்கிழார், செங்குன்றூர்கிழார், கோவூர்கிழார், களத்தூர்கிழார், ஆலத்தூர்கிழார், ஆவூர்கிழார், ஆவூர்மூலங்கிழார், இடைக்குன்றூர்கிழார், ஐயூர்மூலங்கிழார், காரிகிழார், குறுங்கோழியூர்கிழார், துறையூர்ஓடைகிழார், நொச்சிநியமங்கிழார், பெருங்குன்றூர்கிழார், மாங்குடிகிழார், வடமோதங்கிழார் முதலாக இவ்வாய்பாடேபடப் பெயர்வழங்கப்பெற்ற பண்டைத்தமிழ்ப்புலவர் பல ருண்டு.) இப்பெயர்களைக் கூடலூர்க்கிழார், அரிசிற்கிழார், மாங்குடிக்கிழார் என்றாற்போல விகாரப்படுத்தியும் வழங்குவர்.

இவர்இயற்றிய முதுமொழிக்காஞ்சி கடைச்சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்கி லொன்றானதனால், இவ்வாசிரியரது காலம், இப்பொழுதைக்கு ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முன் பென்பது போதரும்.

இவரது மதம் வரலாறு முதலியவற்றைப் பற்றிய விவரம் தெரியவில்லை.

எட்டுத்தொகையு ளொன்றான ஐங்குறுநூற்றைத் தொகுத்தவரும், குறுந்தொகையில் கசுஎ,கசுஅ,உகரு-ஆஞ் செய்யுட்களியற்றியவரும், புறநானூற்றில் உகக-ஆம் பாட்டைப் பாடியவருமாகிய கூடலூர்கிழாரும்,இந்த மதுரைக்கூடலூர்கிழாரும் ஒருவரே யென்று கருதக்கூடுமாயினும் (புறநானூற்றின் அச்சுப்பிரதி - பாடினோர்வரலாறு), இவர்வேறு அவர்வேறு என்பதே சித்தாந்தம்; (ஐங்குறுநூற்றின் அச்சுப்பிரதி - நூலாசிரியர்வரலாறு பார்க்க.) அவர்.'புலத்துறைமுற்றிய கூடலூர்கிழார்'என அடைமொழிசேர்த்து வழங்கவும்படுவர். இவ்விருவரும் வேறாதல், பாரதம்பாடியபெருந்தேவனாரும் கவிசாகரப்பெருந்தேவனாரும் வேறாதல் போலும்.

முதலாவது

## சிறந்த பத்து.

இப்பகுப்பிலுள்ள பத்துவாக்கியங்களுள் ஒவ்வொன்றும் 'சிறந்தது' என்று பொருள்படுகின்ற 'சிறந்தன்று' என்ற முற்றைக் கொண்டதாய் இன்னின்னது சிறந்த தென்று விளக்குதலால்,இப்பகுப்பிற்கு'சிறந்தபத்து' என்று பெயராயிற்று. 'அறிவுப்பத்து' முதலிய மற்றையபகுப்புக்களுக்கும் இங்ஙனமே காரணங் காண்க. சிறந்தபத்து -சிறந்தவற்றைக்கூறும் பத்து; இரண்டாம்வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகை: சிறந்த - பலவின்பால் வினையாலணையும் பெயர். இதனைப் பெயரெச்சமாகவே கொண்டு, 'காடவிட்ட படலம்', 'திரௌபதி மாலையிட்ட சருக்கம்', 'தன்மபுத்திர னரசியலடைந்த வத்தியாயம்' என்றஇடங்களிற் போல, சிறந்தபொருளைக்கூறும்பத்தென்று கருத்து அமைத்துக்கொள்ளவுமாம். (ரு) அல்லபத்து, (அ) எளியபத்து, (கூ) நல்கூர்ந்தபத்து என்பனவும் இத்திறத்தன. 'பத்து' என்ற எண்ணின்பெயர், எண்ணுடைப்பொருளாகிய பத்துமுதுமொழிகளைக் குறித்தலால், எண்ணலளவையாகுபெயராம். இங்கு இந்நூற்பகுப்பாயின்றது.

1.—(இதன்பொருள்.) ஆர்கலி உலகத்து - கடல்சூழ்ந்த இந்நிலவுலகத்தி லுள்ள, மக்கட்கு எல்லாம் - மனித ரெல்லார்க்கும்,—ஓதலின் -(வேத சாஸ்திரங்களைக்) கற்றுணர்தலைக்காட்டிலும், ஒழுக்கம் உடைமை - (தம் தமது வருணாச்சிரமத்திற்கு ஏற்ற) நல்லொழுக்கத்தை யுடையவராதல், சிறந்தன்று - சிறந்தது; (என்றவாறு.)

கல்வியாவது - கற்றற்குஉரிய நூல்களைக் கற்றல்; அவையாவன - அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களை யுணர்த்துகின்ற நூல்கள். ஒழுக்கமாவது-பிராமணர்முதலிய சாதியார், தம்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம்முதலிய ஆச்சிரமங்களில் நின்று, அவற்றிற்குச் சொல்லிய அறங்களினின்று வழுவாது ஒழுகுதல். "கேடில்விழுச்செல்வம்" என்று பாராட்டப்படுகின்ற கல்வியின் சிறப்பு,லோகப்பிரசித்தமானது. அதனினும் ஒழுக்கம் சிறந்த தென்றது, "கற்க கசட றக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்றபடி கல்விக்குப்பயன் ஒழுக்கமுடைமை யாதலாலும், அவ்வொழுக்கமில்லாவிடின் கற்றதனாற் பயனில்லை யாதலாலும், "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்றபடி கல்விகுன்றின் சாதிகெடாதுநிற்க,ஒழுக்கங்குன்றினாலோ சாதிகெட்டுவிடுதலாலு மென்க. பயனாகிய ஒழுக்கம் கைகூடப்பெறுதலானது கருவியாகிய கல்வி கைகூடுதலினும் மேலென்பது தேர்ந்தபொருள். "ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்" என்று ஔவையார் கூறியதும் இதுபற்றியே.

ஆர் கலி - நிறைந்த ஓசையை யுடையது என்று பொருள்படுங் காரணக்குறி; வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. உலகம் - லோகமென்ற வடசொல்லின் விகாரம்; தனியே தமிழ்மொழி யென்பர் நச்சினார்க்கினியர். மக்கள் - பன்மைப்பெயர். 'எல்லாம்' என்பது - இருதிணைக்கும் பொது; இங்கு உயர்திணைக்கு வந்தது. ஓதலின்——இன் - ஐந்தனுருபு - எல்லைப்பொருளது. சிறந்தன்று - உடன்பாட் டிறந்தகாலமுற்று; சிற - பகுதி, று - ஒன்றன்பால்விகுதி, த் - இடைநிலை, அன் - சாரியை, மற்றவை - சந்தி விகாரம். (இச்சொல் சிறவா தென்று எதிர்மறைப்பொருள்படுமிடத்து,அல் - எதிர்மறையிடைநிலையாகும்.) இவ்வகைஉடன்பாட்டுவினைமுற்றின் பிரயோகத்தை இப்பத்துமுழுவதிலும், ௯ - ஆவது நல்கூர்ந்தபத்துமுழுவதிலும், புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுக்களிலும், தொல்காப்பியத்தில் "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" என்றவிடத்தும், பிறசான்றோர்செய்யுள்களிலுங் காண்க. ஒழுக்கம் - ஒழுகுதல்: தொழிற்பெயர்; ஒழுகு - பகுதி, அம் - விகுதி, பகுதியினிடையே ககரவொற்று மிக்கது - விகாரம். உடைமை - பண்புப்பெயர்.

இந்நூலின் முதற்செய்யுளாகிய இதிலே யுள்ள "ஆர்கலியுலகத்துமக்கட்கெல்லாம்"என்ற முதலடியை மற்றைத் தொண்ணூற்றொன்பது வாக்கியங்கட்கும் தனித்தனி கூட்டிப் பொருள்கொள்ளவேண்டும். இக்கருத்து அமையவே, பழையவுரைகாரர் ஒவ்வொருபத்திலும் முதல்வாக்கியத்திற்கு இதனைச்சேர்த்து அந்தந்தஇடத்திற்குஏற்பப் பொழிப்புரைகூறியுள்ளார். அதற்குஏற்பவே, பாடபுத்தகத்திலும் ஒவ்வொருபத்தின் முதல்வாக்கியமும் இம்முதலடியோடு சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றது.

இச்செய்யுள் - குறள்வெண்பாவிற்கு இனமாகிய **வெண்செந்துறை.** அதனிலக்கணம் - யாப்பருங்கலத்தில் "ஒழுகிய வோசையி னொத்தடி யிரண்டாய், விழுமிய பொருளது வெண்செந்துறையே" எனக் காண்க; ஒழுகியஓசையையும், சிறந்தபொருளையும், தம்முள்அளவொத்த இரண்டடிகளையு முடையதாய் வருவது, வெண்செந்துறையாம்: ('செந்துறைவெள்ளை' என்பதும் இது.) சீர்வரையறுத்திலாமையால், எத்தனைசீராலும் அடியாய்

வரப்பெறும். "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்,ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" என்பதும், "கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை, என்று மேத்தித் தொழுவோம் யாமே" என்பதும் - நாற்சீ ரிரண்டடியால் வந்த வெண்செந்துறைக்கு உதாரணமாக யாப்பருங்கலவிருத்தியுரையிலும், யாப்பருங்கலக்காரிகையுரையிலும் காட்டப்பட்டுள்ளன. (முதுமொழிக்காஞ்சி மூலம்மாத்திரமுள்ளஏட்டுப்பிரதிகள்சிலவற்றில் அந்நூலினிறுதியில் 'ஆகக் குறட்டாழிசை - ௧00' என்று எழுதப்பட்டிருக்கின்றது. அது பொருத்த முடையதெனத் தோன்றவில்லை. குறட்டாழிசையின் இலக்கணம் - நாற்சீரின்மிக்க பலசீரால் வரும் அடியிரண்டாய் ஈற்றடிகுறைந்துவருவதும்,அடியிரண்டாய் அளவொத்ததாயினும் விழுமியபொருளும் ஒழுகியஓசையுமின்றி வெண்செந்துறையிற் சிதைந்துவருவதும், செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத்தளைதட்டுக் குறள்வெண்பாவிற் சிதைந்துவருவதுமாகிய இம்மூன்றுவகையுமாம்.)

"ஆர்கலியுலகத்துமக்கட்கெல்லாம்"என்றஅடியை,இந்நூலின் மற்றை வாக்கியமொவ்வொன்றனோடுங் கூட்டித் தனித்தனி இரண்டடிச்செய்யுளாக்கி நூறுவெண்செந்துறைகளாலமைந்ததுஇந்நூ லென்னலாம். இவ்விஷயத்தில் தொல்காப்பியவுரை வேறுகின்றது; "தரவின்றாகி" என்னும் செய்யுளியற்சூத்திரத்தின் உரையில் "ஓதலிற்சிறந்தன் றொழுக்கமுடைமை' என்பது இரண்டடியின்றி முதுமொழியாகலானும், 'ஆர்கலியுலகத்துமக் கட்கெல்லாம்' என்பது பலவற்றுக்கும் பொதுவாகலானும், அஃது இரண்டடிவரையறையுடைய பாட்டெனப்படாது' என்றமை காண்க.

யாப்பருங்கலவிருத்தியுரையிலும், யாப்பருங்கலக்காரிகையுரையிலும், ரகரவொற்று ஆசிடையிட்டுவந்த வல்லினவெதுகைக்கு இச்செய்யுள் உதாரணங்காட்டப்பட்டிருக்கின்றது. அவ்வெதுகைக்கும், வெண்செந்துறைக்கும் இலக்கணவிளக்கவுரையிலும் இச்செய்யுளே உதாரணம். வீரசோழியவுரைகாரரும் வெண்செந்துறைக்கு இதனையே உதாரணமாகக் கொண்டனர்.

இனி, இந்நூலின்வாக்கியங்களை நூற்பா வென்னலுமாம். அதாவது - சிலவகையெழுத்துக்களாலாகிய சொற்றொடராய்ப் பலவகைப்பொருள்களை விளக்கித் திட்பநுட்பம்அமைந்துவருவது. நூற்பாவெனினும், சூத்திரமெனினும் ஒக்கும். இது அகவலடிகளால்வருதல் பெரும்பான்மை.

(பழையவுரை.) என்பது. கடல்சூழ்ந்த வுலகத்து மக்கட்கெல்லாம், ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை; என்றவாறு.— * [ஆர்கலி - சமுத்திரம்; பின்மொழியாகுபெயர். சிறந்தன்று - ஒன்றறிசொல். உயர்வுசிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. ஆசாரம் - விலக்கியன ஒழித்து விதித்தனசெய்தல்; சீலம்.] (௧)

2.—(இ - ள்.) காதலின் - (ஒருவன் பிறரால்) அன்பு செய்யப்படுதலினும், கண் அஞ்சப்படுதல் - (அவரால்) நன்குமதித்து அஞ்சப்படுதல், சிறந்தன்று - சிறந்தது; (எ - று.)

கண்ணஞ்சப்படுதலாவது - பலரும்அஞ்சத்தக்க மதிப்பைப் பெறுதல்; அது, 'உட்கு' எனப்படும்: ("உரு உட்காகும்" என்ற தொல்காப்பியத்தைக் காண்க.) அது, மிகவும்விரும்பத்தக்கபொருள்களி லொன்றாம்; "உருவு மிளமையு மொண்பொருளு முட்கும்" என்று இணம்படுத்திக்கூறினர் நாலடியாரில். பெருமதிப்புக்காரணமாக ஒருவன் தான் பலரால் அஞ்சப்படுவது, அவன்தான் பிறகாரணங்களால் அனைவராலும் அன்புவைக்கப்படுதலினும் மேலாம் என்பது, தேர்ந்தகருத்து. பொதுமைக்குணமாகிய காதலிக்கப்படுதலினும் பெருமைக்குணமாகிய அஞ்சப்படுதல் விசேஷமென்க.

---

* இவ்வாறு பழையபொழிப்புரையின்பின் இருதலைப்பகரத்தினுள்ளே காணப்படுபவை ஒருபிரதியிலிருந்தன.

கண்ணஞ்சப்படுதல்என்றதில், 'கண்' என்றது - தமிழுபசர்க்கம்: [பெருந்தேவனார்பாரதம் - 27 - உரை.]

(பழையவுரை.) எ-து. பிறர் தன்மேற்செய்யுங் காதலினுஞ் சிறந்தது, மற்று அவராற் கண்ணஞ்சப்படுதல்; எ - று.—[காதல் - விருப்பம். * 'கண்ணஞ்சப்படுதல்' பாடமாயின், தான் பிறர்மேற்செய்யுங் காதலினும் அவரூற்றத்தின்கண் அஞ்சிநடத்தல் சிறந்தன்று என்று பொருளுரைத்துக்கொள்க. ஊற்றம் - துன்பம்.] (உ)

3.—(இ - ள்.) மேதையின் - அறிவுடைமையால் தானாக ஒன்றை யறியும் அறிவைக்காட்டிலும், கற்றது மறவாமை - (தான் ஓராசிரியனிடத்துக்) கற்றதை மறவாதிருத்தல், சிறந்தன்று - சிறந்தது; (எ - று.)

குருமுகமாகக் கற்றுஉணர்ந்தால்மாத்திரமே அருமையான நூல்களின் சம்பிரதாயமான அர்த்தம் ஐயந்திரிபற நன்குவிளங்கும்; "எத்துணையவாயினுங் கல்வி யிடமறிந்து, உய்த்துணர்வில்லெனி னில்லாகும்" என்றார் பிறரும். அங்ஙனமன்றித தான்தோன்றியாகத் தனக்குள்ளஅறிவைக்கொண்டு ஒன்றையறியுமிடத்து அதன்உண்மைப்பொருள் புலப்படாமற்போகவுங் கூடும். ஆனதுபற்றி, ஆசிரியனிடம் உபதேசத்தாற் பெற்ற பொருளை மறவாதிருத்தல், தனது அறிவினால் அவ்வப்பொழுது ஒன்றையறிதலினும் மேம்பட்டதாயிற்று. "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்" என்றார் திருவள்ளுவனாரும். மறவாமை - இடைவிடாமற் சிந்தித்தல் முதலியவற்றாற் பாதுகாததல்.

மேதை - மேதா என்ற வடசொல்லின் விகாரம்; அறிவென்பது பொருள். (பேதை யென்ற தமிழ்ப்பதம், இதன் எதிர்மொழியாம்.) கற்றது-கற்கப்பட்டது; செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை: ஒன்றன்பால் வினையாலணையும்பெயர்.

(பழையவுரை.) எ - து. தானாக ஒன்றை மதியுடைமையான் அறியும் அறிவினும் மிக்கசிறப்புடைத்து, தான்கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல்; எ-று.—[மேதை - அறிவு. கடைப்பிடித்தல் - மறவாதிருத்தல்.] (ஙு)

4.—(இ - ள்.) வாய்மை உடைமை - சத்தியத்தையுடையவனாயிருத்தலானது, வண்மையின் சிறந்தன்று-செல்வமுடைமையைக்காட்டிலும் சிறந்தது; (எ - று.)

இம்மை மறுமை யிரண்டிலும் பலநன்மைகளை விளைக்கவல்லதும், அறத்துக்கும் இன்பத்துக்குங் காரணமாவதுமான செல்வத்தினது சிறப்பு, பிரசித்தமானது; "யாம் மெய்யாக்கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையின் நல்ல பிற" என்றபடி மெய்ம்மையாகிய தருமம் தலைமைபெறுதலால், அதனைச் செல்வத்தினுஞ் சிறந்த தென்றார். செல்வத்தினாலாகும்நன்மைகளினும் வாய்மையினாலாகும்நன்மைகள் மிக்கன வென்க. செலவம், ஒரோவழி பொய்ம்மைக்கு இடமாகுதலாலும், அது இழித்துரைக்கப்பட்டது. இனி, 'வண்மையின்' என்பதற்கு - ஈகையைக்காட்டிலும் என்று உரைத்தலு மொன்று. 'வன்மையின்' என்று பாடமோதுவாருமுளர். 'வளமையில்' என்ற பாடம், சிலஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது; அது, அடுத்தவாக்கியத்தில் 'இளமையில்' என வருவதனோடு பிராசம்ஒத்தாய்ச சிறக்கும்: வளமை - செல்வம்.

(பழையவுரை.) எ - து.செல்வத்தினும் மிக்கசிறப்புடைத்து மெய்யுடைமை; எ - று.—[வாய்மை - மெய்ம்மை.] (சா)

5.—(இ - ள்.) மெய் பிணி இன்மை - உடம்பில் நோயில்லாதிருத்தலானது,இளமையின் சிறந்தன்று-இளமைப்பருவத்தைக்காட்டிலுஞ் சிறந்தது.

* இதனால், 'கண்டஞ்சப்படுதல்' என்பது மற்றொருபாடமாகலாம்.

நோயில்லாதார்க்கு உடம்பும் உள்ளமும் உறுதிப்பட்டுச் செய்தொழில் களில் ஊக்கம் மிகவளர்தலாலும், மேனிநலம்மிகுதலாலும், அது, "நீரிற் குமிழி யிளமை" என்னும்படி விரைவில்மாறுமியல்பினதான இளம்பிராயத் தினும் மேம்பட்டதென்க. "நோயற்றவாழ்வே வாழ்வு", 'நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்' என அதன்சிறப்பை யுணர்க. 'மெய்ப்பிணியின்மை' என்று பிரதிபேத முண்டு. பிணியுண்டானால்,இளமையிருந்தும் பயனில்லை.

(பழையவுரை.) எ - து. இளமையினும் மிக்க சிறப்புடைத்து, உடம்பு நோயின்மை; எ - று. (ரு)

6.—(இ - ள்.) நாணு - நாணத்தையுடையராயிருத்தலானது, நலன் உடைமையின் சிறந்தன்று - எல்லாநன்மைகளையுமுடையராயிருத்தலினுஞ் சிறந்தது; (எ - று.)

நாண் - தமக்குத்தகாதகாரியங்களைச் செய்தற்குக் கூசுதல்; நாணு வது - 'செயத்தகாதவற்றின்கண் உள்ளமொடுங்குதல்' என்றார் நச்சினார்க் கினியரும். திருவள்ளுவர் திருக்குறளிற் குடிமை யென்னும் அதிகாரத்தில் "இற்பிறந்தார்கண்ணலல்லதில்லை யியல்பாகச்,செப்பமும் நாணு மொருங்கு" என்றும், "ஒழுக்கமும் வாய்மையும் நாணு மிம்மூன்றும், இழுக்கார் குடிப் பிறந்தார்" என்றும், சான்றாண்மையென்னும் அதிகாரத்தில் "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு, ஐந்து சால்பூன்றிய தூண்" என் றுங் கூறினா ராதலால், அது மகளிர்க்கேயன்றி ஆடவர்க்கும் உரிய குண மாம். நலன் - சாதியொருமை; ஆதலின், குடிப்பிறப்பு, கல்வி, குணம், செ யல், இனம் முதலியவற்றால் வரும் நன்மைகளெல்லாம் கொள்ளப்படும். "நலஞ்சுடும் நாணின்மை நின்றக்கடை" என்றபடி பழிபாவங்களில்நாணுத லில்லாமை எல்லாநன்மைகளையுங் கெடுக்கு மாதலால், நாணமுடைமை எல்லாநன்மைகளையுடைமையினுஞ் சிறந்ததாயிற்று; "நலம்வேண்டின் நா ணுடைமை வேண்டும்" என்றார் திருவள்ளுவரும். இனி, நாணமுடைமை அழகுடைமையைக்காட்டிலுஞ் சிறந்த தென்றலு மொன்று; "அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேற், பிணியன்றோ பீடுநடை", "காமுற்ற பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை" என்பன காண்க.

நாண் - நாணம், நாணுதல்:முதனிலைத்தொழிற்பெயர்; உ - சாரியை: [நன் - மெய் - ச.]

(பழையவுரை.) எ - து. அழகுடைமையினும் மிக்கசிறப்புடைத்து நாணுடைமை; எ - று.—[நாண் - வெட்கம்.] (சு)

7.—(இ - ள்.) கற்பு-கல்வியையுடையராதலானது, குலன் உடைமை யின் சிறந்தன்று-நல்லகுலத்தையுடையராயிருத்தலினுஞ்சிறந்தது; (எ - று.)

உயர்குலத்திற் பிறந்தவரும் கல்வியிலராயின் தாழ்வடைவ ராதலா லும், இழிகுலத்திற்பிறந்தவரும் கல்வியுடையராயின் உயர்வடைவராதலா லும், உயர்குடிப்பிறப்பைக்காட்டிலும் கல்வியறிவுடைமை சிறக்கும். உடம் போடொழியுங் குலப்பெருமையினும் உயிரோடுசெல்லுங் கல்வியுயர்ச்சி சிற ந்த தென்பதும் உணரத்தக்கது. கல்லாதாரது குலப்பெருமையாற் பயனி ன்மை, இதில் விளங்கிற்று.

("வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனு மவன்கட் படுமே" என்ற புறநானூறும், "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றாரனைத்திலர் பாடு"என்ற திருக் குறளும், "நாற்பாற்குலத்தின்மேற்பாலொருவன், கற்றிலனாயிற் கீழிருப்ப வனே", "எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடியிற்கற்றோரை வருகவென்பார்" என்கிற நறுந்தொகையும், "ஆக்குமறிவானலது பிறப்பி னால்,மீக்கொளுயர்விழிவு வேண்டற்க"என்னும் நன்னெறியும் இங்குநோக் கத்தக்கன.)

கற்பு - கற்றல்: தொழிற்பெயர்; கல்-பகுதி, பு-விகுதி. இனி,(மகளிர்க்குப்) பதிவிரதாதருமமானது உயர்குலத்திற்பிறத்தலாலாகிய பெருமையினும் மேலான்தென்றும் உரைகொள்ளலாம். குலன் - குலம் என்பதன் ஈற்றுப்போலி.

(பழையவுரை.) எ-து. நல்லகுலனுடைமையினும் கல்வியுடைமை சிறப்புடைத்து; எ - று. (எ)

8.—(இ - ள்.) கற்றலின் - (தாமாக ஒன்றைக்) கற்பதைக்காட்டிலும், கற்றோரை வழிபடுதல் சிறந்தன்று - கற்றுணர்ந்தவர்களை உபசரித்தல் சிறந்தது; (எ - று.)

குருமுகமாகவன்றித் தாம் தனியே நூல்களைப் படித்துஅறியத்தொடங்கினால், சந்தேகவிபரீதங்களில்லாத தேர்ந்தஞான முண்டாகுமென்கிற நிச்சயமில்லை; கற்றவர்க்கு வழிபாடுசெய்தாலோ அவரருளாலும் தமது குருபக்தியினாலும் தெளிவானகல்வியறிவு கைகூடு மாதலால், கற்றோரைவழிபடுதல் கற்றலினுஞ்சிறந்ததாம். (துரோணாதுபிம்பத்தைப்பிரதிஷ்டைசெய்து பூசித்துவந்த ஏகலவ்யனென்ற வேடனுக்கு அக்குருபக்தியால் வில்வித்தை முழுவதும் கைகூடியமை, இதற்குத் திருஷ்டாந்தமாம்.) "கற்றல்வேண்டுவோன் வழிபாடுதண்டான்" என்பர் மேல் தண்டாப்பத்திலும்.

(பழையவுரை.) எ - து. தான் ஒன்றைக் கற்குமதனினுஞ் சிறப்புடைத்து, கற்றோரை வழிபாடுசெய்தல்; எ - று. (அ)

9.—(இ - ள்.) செற்றோரை செறுத்தலின் - பகைவரை நெருக்கிவருத்துதலைக்காட்டிலும், தன் செய்கை சிறந்தன்று - (செல்வம் சேனை துணைவலி முதலியவற்றால்) தன்னை அபிவிருத்திசெய்தல் சிறந்தது; (எ - று.)

தன்னைத் தான் பெருமைப்படுத்திக்கொள்ளவே, பகைவர் எளிதில் அழிந்தொழிவர், அல்லது அஞ்சியடங்குவர்: ஆனதுபற்றி, பகைவரை நெருக்குதலினும் தன்னைப்பெருக்குதல் சிறந்ததாயிற்று.

செற்றோர் - பகைத்தவர்; செறு - பகுதி: ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டிற்று. தற்செய்கை - இரண்டாம்வேற்றுமைத்தொகை.

(பழையவுரை.) எ - து. பகைவரைச்செறுத்தலினும் மிகச்சிறப்புடைத்து, தன்னைப்பெருகச்செய்தல்; எ - று.—[செற்றோர்-பகைவர். செறுத்தல்-தண்டித்தல்.] (கூ)

10.—(இ - ள்.) முன் பெருகலின் - (செல்வம்) முதலில்அதிகப்பட்டுப் பின்புஅழிதலைக்காட்டிலும், பின் சிறுகாமை - முன்புவளராவிடினும்பின்பு (நின்றநிலையிற்)குறையாதிருத்தல், சிறந்தன்று - சிறந்தது; (எ - று.)

"கண்ணிலான் பெற்றிழந்தா னென வுழந்தான் கடுந்துயரம்" என்றாற்போல,முதலிற் செல்வம் வளரப்பெற்றுப் பின்பு அதுஅழியப்பெறுதல் மிக்க வருத்தத்தை விளைக்கு மாதலால், அதனினும் செல்வம் பின்புகுறையாமல் என்றும்ஒருபடியாய் நின்றநிலையில் நிற்றல் மேல் என்பதாம். பின் 'சிறுகாமை' என்பதை நோக்கி முன்னே 'அழிதல்' என்பதும், முன் 'பெருகலின்' என்றதை நோக்கிப் பின்னே 'வளராவிடினும்' என்பதும் வருவித்து உரைக்கப்பட்டன.

முன், பின் - காலத்தின்மேலன. ஒன்றற்குஒன்று மாறான இச்சொற்கள் ஒருவாக்கியத்தில் நின்றது, தொடைமுரண்.

(பழையவுரை.) எ - து. செல்வம் முற்காலத்துப்பெருகிப் பின் அழிதலின் நின்றநிலைமையிற்சிறுகாமை சிறப்புடைத்து; எ - று. (௧௦)

சிறந்தபத்து முற்றிற்று.

### இரண்டாவது

## அறிவுப் பத்து.

இப்பகுப்பில் வருகின்ற பத்துவாக்கியங்களும் 'அறிப' என்றதைக் கொண்டனவாய், இன்னதனாலே இன்னதையறியலாமென அறிவைக் கூறுதலால், இப்பகுப்பிற்கு 'அறிவுப்பத்து' என்று பெயராயிற்று. அறிவைக்கூறுகின்ற பத்துவாக்கியங்க ளென்க; இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. 'அறிவுபத்து' என்று பிரதிபேதம் உண்டு.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த இந்நிலவுலகத்தி லுள்ள மனிதரெல்லாருள்ளும்,—பேர் இல் பிறந்தமை - (ஒருவன்)உயர்ந்தகுலத்திற் பிறந்ததை, ஈரத்தின் அறிப - (அவன் உயிர்களி னிடத்துக்) கருணையுடைமையால் அறிவார்கள்; (எ - று.)—'அறிப' என்ற பலர்பால்முற்றுக்கு 'அறிவுடையார்' என்ற எழுவாய் வருவிக்க; அடுத்த ஒன்பதுவாக்கியங்களுக்கும் இது கொள்க.

“இனநன்மை யின்சொ லொன்றீதல் மற்றேனை, மனநன்மை யென் றிவையெல்லாம் - கனமணி, முத்தோடிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப,இற்பிறந்தார்கண்ணே யுள”என்றபடி உயர்குலத்திற்பிறந்தவர்க்கே நற்குணநற்செயல்களமைதல் பெரும்பான்மை யாதலால், ஒருவன் ஜீவகாருணியமுடையவனாயிருத்தல்கொண்டு அவன் உயர்குலத்திற்பிறந்தவனென்பதை அறியலாமென்க. “நலத்தின்கண் நாரின்மை தோன்றி னவனைக், குலத்தின்கணையப்படும்” எனத் திருவள்ளுவர்கூறியதுங் காண்க. புகையைக்கண்டு நெருப்புஉண்டென்று உணர்வதுபோலக் குறியினால் உய்த்து உணரும் அநுமானப்பிரமாணம் இது.

இடத்திற்கேற்ப, 'மக்கட்கு' என்ற நான்காம்வேற்றுமைக்கு 'மக்களுள்'என ஏழாம்வேற்றுமையாகப் பொருள்கொள்ளப்பட்டது; உருபுமயக்கம். பெருமை + இல் = பேரில்; “ஈறுபோதல்” என்னுஞ் சூத்திர விதி. இல் - வீடு; குடிக்கு இலக்கணை. ஈரம்-குளிர்ச்சி: மனத்தின் குளிர்ந்தஇயல்பாகிய அன்புக்கு இலக்கணை; அத்து - சாரியை. இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருளது. அறிப—'ப'என்றபலர்பால்விகுதி இங்குஎதிர்காலங்காட்டிற்று.

(பழையவுரை.) எ - து. கடல்சூழ்ந்தவுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒருவன் பெருங்குடியிற் பிறந்தமையை அவனீரமுடைமையானே *அறிவர்; எ-று.—[ஈரம் - அன்பு.] (கக)

2.—(இ - ள்.) ஈரம் உடைமை - (ஒருவன் மனத்தில்) அருளுடையனென்பதை, ஈகையின் - (அவன் இரப்பவர்க்குக்) கொடுத்தலினால், அறிப- அறிவார்கள்; (எ - று.)

“அறனும் அருளுடையான்கண்ணதேயாகும்”என்றபடி அருளில்லாதவர் அறஞ்செய்தலில்லை யாதலால்,ஒருவனது ஈகை அவனது அருளை யறிதற்குக் கருவியாம். ஈகை - 'கை'விகுதிபெற்ற தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ-து. ஒருவன் மனத்தின்கண் ஈரமுடையானென்பதனை அவன் பிறர்க்குக்கொடுக்குங் கொடையினானே அறிவர்; எ-று. (கஉ)

3.—(இ - ள்.) சோரா நல் நட்பு - (ஒருவன்) தவறாத [உறுதியுள்ள] நல்ல சிநேகதருமத்தை யுடையவனென்பதை, உதவியின் அறிப - (அவன் தனது நண்பர்க்குச் செய்யும்) உதவியினால் அறிவார்கள்; (எ - று.)

“உடுக்கையிழந்தவன்கைபோல வாங்கே, இடுக்கண்களைவதாம் நட்பு” என்றபடி, சபையில் ஆடைகுலைந்தவனுக்கு உடனே கை சென்று உதவு

---

* 'அறியக்கடவர்' என்று பிரதிபேதம்.

தல்போல, உத்தமமான சிநேகதருமந் தவறாதவர் தமதுநண்பர்க்கு ஆபத்து நேர்ந்தபோது விரைந்துஉதவிசெய்து துன்பந்தீர்ப்ப ராதலால், அவ்வகையான உயர்நட்பை அவர்செய்யும்உதவியைக்கொண்டு அறியலா மென்க.

சோரா - ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம். உதவி - 'இ'விகுதி பெற்ற தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ-து. ஒருவன் தப்பாத கடைப்பிடியுடைய நல்லாட்பினை யுடையா னென்பது, அவன் நட்டார்க்குச்செய்யும் உதவியினானே அறிவர்; எ - று.—[சோரா - இளையாத. நட்டார் - சிநேகிக்கப்பட்டவர்.]

4.—(இ - ள்.) கற்றது உடைமை - (ஒருவன் தான்கற்ற) கல்வியை யுடையவனாயிருத்தலை, காட்சியின் அறிப - (அவனது) அறிவினாலே அறிவார்கள்; (எ - று.)

"விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல்,கற்றாரொ டேனையவர்"என்றபடி மேலான அறிவுமிகுதி கற்றவரிடத்தே காணப்படு மாதலால், அவ்வறிவு விசேடத்தைக்கொண்டு அவர்கற்றவரென்பதைஅறியலா மென்க. இங்கே, காட்சி - நோக்குஅல்நோக்கம்: அகக்கண்ணாற்காணுதல்; எனவே, அறிவாயிற்று. இத்தொழிற்பெயரில், காண் - பகுதி, சி - விகுதி.

(பழையவுரை.) எ-து. ஒருவனது கல்வியை அவன்தன் அறிவினானே அறிவர்; எ - று.—[காட்சி - அறிவு.] (சச)

5.—(இ - ள்.) எற்றம் உடைமை-(ஒருவன் குடிப்பிறப்பாலும் குணஞ்செயல்களாலும்)உயர்வுடைய னென்பதை, எதிர்கோளின் அறிப - (அவன் தன்னிடம்வருபவரை)எதிர்கொண்டுஉபசரிக்கும்வகையால் அறிவார்கள்.

எதிர்கொள்ளுதல் - வந்தவர்க்கு முன்சென்று அளவளாவுதல்; இது, நவபுண்ணியத்தி லொன்று: அவையாவன - எதிர்கொளல், பணிதல், ஆசனத்துஇருத்துதல், தாள்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், உணவளித்தல் என்பன. அவற்றில் முதலதானஎதிர்கொள்ளுதலை இங்குக்கூறியது, மற்றவற்றிற்கும் உபலக்ஷணம்: [உபலக்ஷணமாவது - ஒருசொல் ஒழிந்த தன்இனத்தையுங் குறிப்பது; நன் பொது-எ.] "இருக்கையெழலு மெதிர்செலவு மேனை, விடுப்பவொழிதலோ டின்ன - குடிப்பிறந்தார், குன்றாவொழுக்கமாக் கொண்டார் கயவரோடு, ஒன்றாவுணரற்பாற்றன்று"என்றபடி தன்னிடம்வந்தவரை எதிர்கொண்டுஉபசரித்தல் மேலோரியல் பாதலால், அவரது இச்செயலைக்கொண்டு மேன்மைக்குணத்தை யுணரலா மென்க. இனி, பிறரை உயர்வாகமதிக்குந் தன்மையுடையனென்பதனை அவன்அவரையெதிர்கொள்ளும்வகையால் அறிவார்களென்று பொருள் கொள்ளுதலுமாம்; எற்றம்-உயர்த்தல். இதற்குப்பழையவுரைகாரர் வேறாகவுரைப்பர்.

எற்றம் - ஏறுதல்: தொழிற்பெயர்; ஏறு - பகுதி, அம்-விகுதி, ற்-விரித்தல். எதிர்கோள் - எதிர்கொள் என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர். 'தேற்றமுடைமை' என்றும், 'எதிர்கொளின்' என்றும் பாடங்கள் காணப்படுகின்றன.

(பழையவுரை.) 'எற்றமுடைமை' என்பது பாடம். எ - து. ஒருவன் ஆராய்ந்துதுணியவல்ல னென்பதனை, அவன்முற்கொண்டுபாதுகாக்குங் காப்பானே அறிவர்; எ - று.—[எற்றம் - உய்த்தல்.] (சரு)

6.—(இ - ள்.) சிறு இல் பிறந்தமை - (ஒருவன்) தாழ்ந்தகுலத்திற்பிறந்தவ னென்பதை, பெருமிதத்தின் அறிப - (அவனது) செருக்கினால் அறிவார்கள்; (எ - று.)

உயர்ந்தகுலத்திற்பிறந்தவர்க்குப் பணிவுடைமை இயல்பாவதுபோலத் தாழ்ந்தகுலத்திற்பிறந்தவர்க்குப் பணிவின்றிச்செருக்குதல் இயல்பாதலால், அத்தன்மையைக்கொண்டு அவர் தாழ்ந்தகுலத்தவரென்பதை யுணரலாமென்க. "சிறியாருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப், பேணிக்கொள்வேமென்னும் நோக்கு", "பணியுமா மென்றும் பெருமை சிறுமை, யணியுமாந் தன்னை வியந்து", "பெருமை பெருமிதமின்மை சிறுமை, பெருமிதமூர்ந்துவிடல்" என்ற திருக்குறட்பாக்கள் இங்கு நோக்கத்தக்கன.

சிற்றில் - 'பேரில்' என்பதன் எதிர்மொழி. சிறுமை + இல் = சிற்றில்; பண்புப்பெயர் ஈறுபோய்த் தன்ஒற்றுஇரட்டிற்று. மிதம் - அளவு: வடசொல்; அவ்வரம்பைக்கடந்துநடத்தல், பெருமிதம். மிதத்தினும் பெரிதென்க; எனவே, செருக்காயிற்று.

(பழையவுரை.) சிறுமையுடைய குடியின்கட் பிறந்தானென்பதனை அவன்செருக்கினுனே அறிவர்; எ - று.—[பெருமிதம - கொர்வம்.] (கசு)

7.—(இ - ள்.) குத்திரம் செய்தலின் - (ஒருவன் பிறரை) வஞ்சனைசெய்யுஞ்செயலால், கள்வன் ஆதல் அறிப - (அவன்)திருடனென்பதை அறிவார்கள்; (எ - று.)

வஞ்சகமாகஒழுகுதல் கள்ளரியல்பாதலால், ஒருவனிடம் வஞ்சனைக்குணத்தைக் கண்டால் அவன் பிறர்பொருளைக் களவுசெய்யுங் கருத்தினனென்பதை அறியலாமென்க.

குத்திரம் - க்ஷுத்ர மென்ற வடசொல்லின் விகாரம்; இது வஞ்சனையென்னும்பொருளதாதலை, 'குத்திரபுத்தி' என்ற நரியின்பெயரிலுங் காண்க. கள்வன், கள் - வினைப்பகுதி, அன் - விகுதி, வ் - பெயரிடைநிலை.

(பழையவுரை.) எ - து. ஒருவனை ஒருவன் படிறுசெய்யும் படிற்றால் அவன்கள்வனுதல்அறிவர்; எ - று.—[குத்திரம் - படிறு, வஞ்சகம்.] (கஎ)

8.—(இ - ள்.) சொல் சோர்வு உடைமையின் - (ஒருவன் சொல்லுஞ்) சொற்களில் தவறுடையனுனதுகொண்டு, எ சோர்வும் அறிப - (அவனது) எல்லாத்தவறுகளையும் அறிவார்கள்; (எ - று.)

ஒருவன் முன்சொன்னதற்குப் பின்சொல்வது மலைவாகவும், ஒருநிலையில்நில்லாமல் தாறுமாறுகவும், உறுதியின்றித் தளர்ச்சிப்படவும் பேசவனுயின், அவனது அச்சொற்சோர்வுகொண்டு. அவன் மனத்திற் கெட்டஎண்ணங்களையும் செயலிற் கெட்டவழிகளையுங் கொண்டுள்ளவனென்பதை அறிதல்கூடு மென்க. இத்தன்மை, வியவகாரவிசாரணைகளில் நன்குவிளங்கும். இனி, "ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற், காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு" என்றதை நோக்கி, 'சொற்சோர்வுடைமையின்' என்பதற்கு - கருதியதொழில் முடியும்வழியாற் பேசுஞ் சொல்வன்மை யின்றிச் சொல்தளர்ச்சியுடைமையா லென்றும், "சொலல்வல்லன் சோர்விலனஞ்சானவனை, யிகல்வெல்லல் யார்க்கு மரிது" என்றதை நோக்கி, தான் பிறரிடத்திற் சொல்லவேண்டுஞ் சொற்களில் மறதிபற்றிச் சிலவற்றைச் சொல்லாது விடுதலா லென்றும் பொருள்கொண்டு, அவற்றிற்கேற்றபடி 'எச்சோர்வும்அறிப' என்பதற்குக் கருத்துஅமைத்துக்கொள்ளுதலுமாம். ஒருவனது சொல்வன்மையால் அவனது அறிவு கல்வி அவையஞ்சாமை முதலிய திறமைகள் விளங்குவதுபோல, ஒருவன் சொல்லிழுக்குப்படுதலால் அவனது திறமையின்மைகள் விளங்கு மென்க. "சொற்சோர்வுபடேல்" என்பது, ஆத்திசூடி. "சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிது" என்றார் இனியவைநாற்பதிலும்.

சோர்வு - தொழிற்பெயர். உம்மை - முற்று.

(பழையவுரை.) எ - து. சொற்சோர்வுபடச் சொல்லுதலான், அவனுடைய எல்லாச்சோர்வையும் அறிவர்; எ - று.—[சோர்வு - வழுவுதல்.] (கஅ)

9.—(இ - ள்.) அறிவு சோர்வு உடைமையின் - (ஒருவன்) அறிவில் தளர்ச்சியுடையனாயிருப்பது கொண்டு, பிறிது சோர்வும் அறிப - (அவன்) மற்றைச்சொற்செயல்களிலும்தளர்ச்சியுடையானென்பதை அறிவார்கள்.

தான் அறியவேண்டுபவற்றை அறிதல், பிறர் சொல்லுகின்றவற்றை உணர்தல், ஞாபகசக்தி முதலிய அறிவின்காரியங்களில் ஒருவன் அயர்ச்சியுடையனானால், அதுகொண்டு, அவன் சொல்லவேண்டுபவற்றைச்சொல்லுதல் செய்யவேண்டுபவற்றைச்செய்தல்களிலும் பிழைபடுவனென்பதை உணரலா மென்க. எல்லாத்திறமைகளுக்கும் புத்திபலமே காரணமா மென்பது வெளிப்படை.

பிறிது - சாதியொருமை. உம்மை - இறந்தது தழுவியஎச்சம்.

(பழையவுரை.) எ - து. ஒருவன் தன்அறிவின்கண் *சோர்வுடைமையின், எல்லாஞ்சோர்வுடையனென்பது அறிவர்; எ-று. (கக)

10.—(இ - ள்.) சீர் உடை ஆண்மை-(ஒருவன்) புகழைத்தரும் முயற்சியுடையனாயிருத்தலை, செய்கையின் அறிப - (அவனது) செயலால் அறிவார்கள்; (எ - று.)

ஒருவன் காரியங்களிற்சோம்புதலின்றி இடைவிடாதமுயற்சியுடையனென்பதை அவனதுகாரியங்கள்சித்திபெறுவதைக்கொண்டு உணரலாமென்க.

உடை - உடைய என்ற குறிப்புப்பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். ஆண்மை - ஆள்வினை: வினையை ஆளுந்திறம்; எனவே, முயற்சியாம். ஆள் மை எனப் பகுதிவிகுதிகளாகப் பிரியும். இது ஆடவர்தன்மையாதல் பற்றியும், ஆண் மை யெனற்கு உரியது; இப்பொருளில் ஆண் மை எனப் பிரிபடும். இனி, ஒருவனது சிறப்புள்ளபௌருஷத்தை அவனது செய்வினைத்திறங்களால் அறிவார்க ளென்று பொருளுரைப்பினும் அமையும்.

(பழையவுரை.) எ-து. ஒருவன் புகழுடைய † ஆள்வினைத்தன்மையை அவன்செய்கையான் அறிவர்; எ - று.—[ஆண்மை - ஆளுந்தன்மை.] (உ0)

அறிவுப்பத்து முற்றிற்று.

---

மூன்றாவது

## பழியாப் பத்து.

இப்பகுப்பிலுள்ள வாக்கியங்கள் 'பழியார்'என்ற சொல்லைக் கொண்டு பழியாமையை விளக்குதலால், இப்பகுப்பிற்கு 'பழியாப்பத்து'என்று பெயராயிற்று; பழியாமையைக்கூறும் பத்துமுதுமொழிக ளென்க.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனிதரெல்லாருள்ளும்,—யாப்பு இலோரை - (ஒரு காரியத்திலும்)நிலையில்லாதவரது, இயல்பு - இயற்கையாகிய, குணம் - அந்நிலையின்மைக்குணத்தை, பழியார் - (எவரும்)பழிக்கமாட்டார்; (எ - று.)

---

* 'சோர்வுடையனாயின் எல்லாச்சோர்வுமுடையனென்பது அறிவர்' என்று பிரதிபேதம்.

† 'ஆள்வினை' என்று பிரதிபேதம்.

கட்டுக்கு அடங்கிநடக்கும் இயல்புடையவர் ஒரோவழி வரம்புகடந்து நடந்தால் அது பழித்தற்குஉரியதாகும்; ஏனெனில், அவர் பழிக்குஅஞ்சிச் சரிவர நடப்பர். இயல்பாகவே யாதொருகட்டுக்கும் அடங்கிநடவாதவரை 'இஃது ஓர்இயற்கை' என்று உபேக்ஷையாகவிடுவதன்றி,அவரது அக்குணத்தைப் பழித்தலால் யாதும்பயனில்லை யென்பதாம். இவர்பழித்தலால் அவரியல்பு மாறுமைபற்றி,பழியா ரென்க. அவரைப்பழித்தல் பயனில்செய லென்பது, தேர்ந்தபொருள்.

யாப்பு - யாத்தல், கட்டு; உறுதி: தொழிற்பெயர்; யா - பகுதி, பு - விகுதி, ப்-சந்தி. இலோர்-இலார் என்ற பெயரின் ரகரவீற்றுஅயல்ஆகாரம் ஓகாரமாயிற்று. 'இலோரை' என்பது'இலோரது'என்று பொருள்பட்டது, உருபுமயக்கம; இரண்டாம்வேற்றுமையுருபு, ஆறும்வேற்றுமைப்பொருளில் வந்தது. இவ்வகைமயக்கத்துக்கு இடமின்றி, யாப்பில்லாதவரை அவரது இயல்புகுணம்காரணமாகப் பழியா ரென்று உரைத்தலுமாம். இயல்பு குணம் - இயல்பாகிய குண மெனப் பண்புத்தொகை; "வன்றொடரல்லன முன் மிகா அல்வழி" என்றதனால், இடைதொடர்முன் வலிஇயல்பாயிற்று. குணம் - வடசொல்.

(பழையவுரை.) எ - து. கடல்சூழ்ந்த வுலகத்து மக்களெல்லாருள்ளும், ஒருசெய்கையின்கண்ணுமநிலையில்லாதாரியற்கையாகிய குணத்தை யாவரும் பழியார்; எ - று.—[யாப்பு - உரிமை.] (௯௧)

2.—(இ - ள்.) மீப்பு இலோர் - மேன்மைக்குணமில்லாதவரது, மீ குணம்ஐ-(பிறரைமேன்மைசெய்யாமல் தாம்) மேலாகநடக்குங் குணத்தை, பழியார் - (எவரும்) பழிக்கமாட்டார்; (எ - று.)

"சிறியாருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்,பேணிக்கொள்வே மென்னு நோக்கு", "சிறுமை, பெருமித மூர்ந்துவிடல்" என்றபடி குலம் செல்வம் கல்வி முதலியவற்றால் தம்மைத் தாமே பெரியராகமதித்துச செருக்கிப் பிறரை அலட்சியஞ்செய்தல் அற்பரதுஇயல் பாதலால், அவ்வியல்புடையாரை அந்தவரம்புகடந்தநடக்கைகாரணமாகப் பழித்தலிற் பயனில்லை யென்று கருதி அறிவுடையாரெவரும் பழிக்கமாட்டா ரென்க.

'மீப்பிலோரை மீக்குணம்'என்றது, மீப்பிலோர்மீக்குணத்தை யென உருபுபிரித்துக்கூட்டப்பட்டது. மீக்குணம்—கீழ் 'பெருமிதம்' என்றாற்போலக்கொள்க. மீப்பிலோர்மீக்குணம்—"சிறியாரிடைப் பட்ட மீச்செலவு."

(பழையவுரை.) எ - து. * மேன்மைக்குணமில்லாதார் மேன்மைசெய்யாமையை யாவரும் பழியார்; எ - று.—[மீப்பு - மேன்மை. மீக்குணம் - மேன்மைக்குணம். (௯௨)

3.—(இ - ள்.) நிறைய செய்யா குறை வினை-(ஒருதொழிலைப்) பூர்த்தியாகச் செய்யாததற்குமுன்பு குறைவாகவுள்ள அத்தொழிலை, பழியார் - (எவரும்)பழிக்கமாட்டார்; (எ - று.)

ஒருதொழிலைத் தொடங்கிச் செய்துவரும்பொழுது அத்தொழிலைமுடியாமல அரைகுறையாயிருப்பதென்று பழித்தல் அறிவுடையார்செயலன்றென்பதாம். தொடங்கியசெயல் ஒருகால் விதிவசத்தால் நிறைவேறாமற்போயினும் அதுபற்றி அறிவுடையார் பழியா ரென்பதும்போதரும்;"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து,ஆள்வினையின்மை பழி"என்பது காண்க.

* 'மேன்மைக்குணமில்லாரை மேன்மைசெய்யாமையை' என்று, பிரதிபேதம்.

செய்யா - செய்யாத: ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம். நிறையச் செய்யா, குறை என்ற இரண்டும் - வினைக்கு அடைமொழி. 'நிறையச்செய்யார்' என்றும், 'குறைவினைப்பழியார்' என்றும், 'குறையினைப்பழியார்' என்றும் பாடமுண்டு.

(பழையவுரை.) எ-து. ஒருவினையை நிரம்பச்*செய்யாததற்கு முன்பே அக்குறைவினையை யாவரும் பழியார்; எ - று.—[நிரம்ப - முழுதும்.] (உ௩)

4.—(இ - ள்.) முறை இல் அரசர் நாடு இருந்து - நீதிநெறியில்லாத அரசரது நாட்டில் வசித்திருந்துகொண்டு, பழியார் - (அவர் நீதிநெறிநடத்தாமையை எவரும்) பழிக்கமாட்டார்; (எ - று.)

ஒருநாட்டை யாளும் அரசன் நடுவுநிலைமையோடு அரசாட்சிநடத்தாவிடின், அதுகாரணமாகக் குடிகள் அவனிடம் வெறுப்புக்கொண்டால் அவனதுநாட்டெல்லையைவிட்டுத் தாம் நீங்கி அதன்பின்பு அவனைநிந்தித்தால் நிந்திக்கலாமேயன்றி,அவனதுஆட்சிக்குஉட்பட்ட அந்நாட்டினகத்தேயிருந்து அவனை நிந்திக்கக்கடவரல்ல ரென்பதாம். நிந்தித்தால் அக்கொடுங்கோல்மன்னனது தண்டனைக்கு உள்ளாகி வருந்துவ ரென்பது வெளிப்படை. 'அரசனுடு' என்று ஒருமையான பாடமும உண்டு.

(பழையவுரை.) எ - து. நடுவுசெய்யாத † அரசர்நாட்டின்கணிருந்து அவ்வரசர்நடுவுசெய்யாமையை யாவரும் பழியார்; எ - று. (உ௪)

5.—(இ - ள்.) பெருமை உடையதன் அருமை பழியார் - பெருமையுடையதொரு காரியத்தைச் செய்துமுடித்தல் அரியதென்பதுபற்றி அவ்வருமையைப் பழித்து முயற்சிசெய்யாதிரார்; (எ - று.)

பெரியதொழிலைச்செய்யத்தொடங்கி ஒருகால் அதனை முடிக்காவிட்டாலும் பெருமையுண்டு; சிறியதொழிலைச் செய்யத்தொடங்கி முடித்துவிட்டாலும் பெருமையில்லை; ஆகவே, பெரியதொழிலைச்செய்யக்கருதுதலே மேலோரியல்பு; ஆதலால். அப்பெருந்தொழிலை அருமைகாரணமாகப் பழித்து விட்டிடார் என்பது கருத்து. "அருமையுடைத்தென் றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்", "பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி, னருமை யுடைய செயல்" என்றார் திருவள்ளுவரும். அச்செயல்களாவன - தவம் தானம் முதலியன.

(பழையவுரை.) எ - து. பெருமையுடையதொன்றனை முயன்றுமுடித்துக்கொள்கை அரிதென்று அதனைப்பழித்து முயற்சிதவிரார்; எ - று. (உ௫)

6.—(இ - ள்.) அருமை உடையதன் பெருமை பழியார் - செய்தற்கு அரிய தொழிலைத் தொடங்கிச் செய்துவருகின்றபொழுது அதன்முயற்சிப் பெருமையைப் (பெரிதென்று)பழித்து அதனைக் கைவிடார்; (எ - று.)

"செயற்கரியசெய்வார் பெரியர்" என்றபடி செய்தற்கரியசெயலைத் தொடங்கிச்செய்துவருகையில் அதற்குஉரியமுயற்சி மிகப்பெரிதாயுள்ளதென்று பழித்து அச்செயலை இடையில் விட்டிடார் என்பதாம் இனி,தமக்குக்கிடைத்தற்கரியதாய்விட்டபொருளின் பெருமையை வெறுப்பினால் வீணே பழிக்கமாட்டா ரென்று பொருள்கொள்ளுதலும் அமையும்.

(பழையவுரை.) எ-து. அருமையுடையதொன்றனை முடித்துக்கொள்ளும்பொழுது செய்கை பெரிதென்று பழித்து அதன்கண்உள்ள முயற்சிப் பெருமையைத் தவிரார்; எ - று. (உ௬)

---

* 'செய்வதற்குமுன் செய்தகுறைவினையை' என்றும்,'செய்யாதவர்க்கு முன்போய் அக்குறைவினையை' என்றும் பிரதிபேதம்.

† 'அரசனாட்டின்கணிருந்து அவ்வரசனடுவுசெய்யாமையை' என்று பிரதிபேதம்.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS

7.—(இ - ள்.) செய தக்க - (தமக்கு உதவி)செய்யத்தக்க, நல் கேளிர்-நல்ல நண்பர், செய்யாமை - உதவிசெய்திலராயின் அதனை, பழியார் - (அறிவுடையார் பிறர்க்குச்சொல்லி)நிந்தியார்; (எ - று.)

தமக்குஉதவிசெய்யத்தக்க நல்லநண்பர் சோர்வினாலாவது வேறு எக்காரணத்தினாலாவது தமக்கு உதவிசெய்யாவிட்டால் அதனை அறிவுடையார் நட்பிற்பிழைபொறுத்தலாற் பொறுத்திடுவரே யன்றிப் பிறர்அறியச் சொல்லிப் பழிதூற்றா ரென்பதாம்.

செய=செய்ய: தொகுத்தல்.'செய்தக்க' என்றும் பாடமுண்டு. கேளிர்-கேண்மையென்னும் பண்பினடியாப் பிறந்த பெயர்; (யோகக்ஷேமங்களை அன்போடு)கேட்கும் இயல்பின ரென்க: இர் - பலர்பால்விகுதி. இச்சொல், சுற்றத்தார்க்கும் வழங்கும்.

(பழையவுரை.) எ - து. தமக்கு உதவிசெய்தற்குத் தக்க நல்லகேளிர் உதவிசெய்தில ரென்று பிறர்க்குச்சொல்லிப் பழியார்; எ-று.—[கேளிர்-சுற்றத்தார்.] (௨எ)

8.—(இ - ள்.) அறியாத தேசத்து ஆசாரம் பழியார் - (தாம் முன்பு) அறிந்திராத தேயத்திற் சென்று (அங்குள்ளார் ஒழுகும்) ஒழுக்கத்தை நிந்தியார் (அறிவுடையார்); (எ - று.)

சிறுபான்மை தேசபேதத்தால் ஆசாரம்வேறுபடுதலுண் டாதலால், தான் அறியாத தேசத்திற் சென்று அத்தேயத்தாரது ஆசாரத்தைத் தனது தேசாசாரத்தோடு ஒத்திராமை கருதிப் பழிக்கலாகா தென்க. இனி, இதற்கு - ஒருவன் தான்முன் அறியாத தேயத்திற் சென்று ஆசாரம்குறைவனாயின் அதனை (அறிவுடையார்) பழியா ரென்று பொருள்கொள்ளுதலு மொன்று;ஆசாரத்துக்குப்புறனடையானவர்களில்அறியாததேயத்தானொருவனுதலை, "அறியாததேயத்தா னுதலன் மூத்தான் . . . . மெய்யான, ஆசாரம்வீடுபெற்றார்" என்னும் ஆசாரக்கோவையினு லறிக. 'தேசாந்தரிக்கு ஆசாரங்குறைந்தாலும் குற்றமில்லை'என்ற விலக்கைப் பலநூல்களிற் காணலாம்: பிரயாணத்தில் நான்கிலொருபங்குஆசாரமே விதிக்கப்பட்டுள்ளது.

தேஶம், ஆசாரம்-வடசொற்கள். 'அறியாத்தேயத்து'என்பதும் பாடம்.

(பழையவுரை.) எ - து. தாம் அறியாத தேசத்தின்கண் சென்று அங்குள்ளார்ஒழுகும்ஒழுக்கத்தைப்பழியார்; எ - று. (௨அ)

9.—(இ - ள்.) வறியோன் - பொருளில்லாதவன், வள்ளியன் அன்மை-ஈகைக்குணமுடையவனல்லனுயிருத்தலை, பழியார் - (எவரும்) பழிக்கமாட்டார்; (எ - று.)

பொருளுடையவன் பிறர்க்குக்கொடாதிருந்தால் அது பழிப்புக்குஇடமாகுமே யன்றி, பொருளில்லாதவன் ஈகையிலனுயிருப்பது பழிப்புக்கு இடமாகா தென்க. "இசையாவொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத்தியற்கை" என்றது காண்க.

வறியோன், வள்ளியன் - வறுமை, வண்மை என்ற பண்பினடியாப் பிறந்த பெயர்கள்; முன்னதில், இடைஉகரம் இகரமாயிற்று: பின்னதில், இ - சாரியை. வறுமை - பொருளின்மை. வண்மை - இரந்தவர்க்கு இல்லையென்னுது கொடுத்தல்.

(பழையவுரை.) எ - து. வறுமையுடையானை வண்மையுடையனல்லனென்று பழியார்; எ - று.—[வறியோன் - ஏழை. வள்ளியன் - கொடுக்குந்தன்மையுடையவன்.] (௨௯)

10.—(இ - ள்.) சிறியார் - கீழ்மக்களது, ஒழுக்கம் - தீயொழுக்கத்தை, சிறந்தோர் - நல்லொழுக்கத்தான் மிக்கவர், பழியார்—; (எ - று.)

கீழ்மக்களுக்குத் தீயொழுக்கமுடைமை இயல்பே யாதலால், அதனை ஒருபொருளாகக்கொண்டு நல்லொழுக்கமுடையோர் பழியா ரென்க.

உம்மை-இசைநிறை: உயர்வுசிறப்பு மாம்; ஒழுக்கத்தாற்சிறவாதவர் பழியாமையேயன்றிச் சிறந்தவரும் பழியார் எனக் கொண்டால், இறந்தது தழுவிய எச்சமாம். இனி, சிறியாரொழுக்கமும் சிறந்தோர் பழியார் என்று உம்மைபிரித்துக்கூட்டி, 'சிறந்தோர்' என்பதை இப்பத்தில்நின்ற முதுமொழிகளுக்கெல்லாம் எழுவா யெனக்கொண்டு, உம்மையைக் கீழ்ப்போந்த ஒன்பதுவாக்கியங்களையும் நோக்கிய இறந்தது தழுவியஎச்சமென்றலு மொன்று

(பழையவுரை.) எ-து. சிறுமைக்குணமுடையாருடைய கீழ்மைக்குணத்தை ஒழுக்கத்தான்மிக்காரும் கண்டாற் பழியார்; எ - று.—[மிக்கார் மிகுத்தவர்.] (௩0)

பழியாப்பத்து முற்றிற்று.

---

நான்காவது

## துவ்வாப் பத்து.

இப்பகுப்பிலுள்ள முதுமொழி யொவ்வொன்றும் 'துவ்வாது' என்ற சொல்லைக் கொண்டதாய், துவ்வாமையைக் கூறுதலால், இதற்கு 'துவ்வாப்பத்து' என்று பெயராயிற்று. துவ்வாமை - விரும்பக்கூடாமை, மேன்மையுடையதாகாமை, வெறுக்கத்தக்கதாதல். "அன்பில னான்ற துணையிலன் தான்துவ்வான், எனபரியு மேதிலான் துப்பு" என்ற திருக்குறளில் 'துவ்வான்' என்றது - வலியில்லாதவ னென்றும், 'துப்பு' என்றது - வலிமை யென்றும் பொருள்படுதல் காண்க. இதற்கு 'நீங்கியொழியாமை' என்று பொருள்கூறுவர் பழையவுரைகாரர்.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனிதரெல்லாருள்ளும்,—பழியோர் செல்வம் - பழிப்பையுடையவரது செல்வம், வறுமையின் துவ்வாது - தரித்திரத்தன்மையைக்காட்டிலும் வெறுக்கத்தக்கது; (எ - று.)

"எற்றுள்ளும், இன்மையி னின்னாத தில்லை". 'கொடிது கொடிது வறுமை கொடிது" என்றபடி வறுமை மிகக்கொடிய தென்பது பிரசித்தம். பழிபாவங்களைத் தரும் வழியாற் சம்பாதித்தவரது செல்வம் அவ்வறுமையைக் காட்டிலும் இன்னா தென்பதாம். வறுமைத்துன்பம் இம்மையில் அனுபவமாத்திரத்தாற் கழியத்தக்கது; தீயவழியாற்சேர்த்தவரது பொருள், இம்மையில் உலகநிந்தனையையும். மறுமையில் நரகத்துன்பத்தையும் விளைத்தலால், அவ்வறுமையினுங்கொடிதாம். "பழிமலைந்தெய்திய வாக்கத்திற் சான்றோர், கழிநல்குரவே தலை" என்றார் திருவள்ளுவனாரும். நிலையில்லாதசெல்வத்தின் பொருட்டு நிலையுள்ளபழியை மேற்கொள்ளுதல் தகா தென்க.

வறுமையின், இன் - ஐந்தனுருபு; எல்லைப்பொருளது. துவ்வாது—து - பகுதி, ஆ - எதிர்மறையிடைநிலை, து - ஒன்றன்பால்விகுதி, வ் - உடம்படுமெய், மற்றொரு 'வ்' - சந்தி. துப்பு-அனுபவித்தல்; அதற்கேலாது, துவ்வாது

(பழையவுரை.) எ-து. ஆர்கலியாற் சூழப்பட்ட உலகத்து எல்லாமக்களுள்ளும், பழியுடையோர்செல்வம் வறுமையின் நீங்கியொழியாது; எ-று.—[துவ்வாது - ஒழியாது.] (௩௧)

2.—(இ-ள்.) கழி தறுகண்மை-மிக்க கொடுமையுடையனாயிருத்தல், பேடியின் துவ்வாது-பேடித்தன்மையைக்காட்டிலும்வெறுக்கத்தக்கது; (எ - று.)

பேடி - பெண்ணுறுப்புமிக்கு ஆணுறுப்புக்குறைந்த நபும்ஸகம். (ஆணுறுப்புமிக்குப் பெண்ணுறுப்புக்குறைந்த நபும்ஸகம், அலி யெனப்படும். பேடி என்பது - 'நபும்ஸகம்' என்ற வடசொற்போல, இவ்விருவகைக்கும் பொதுப்பெயராம்.) ஆண் பெண் என்ற இருபகுப்பினுள் ஒன்றிலுஞ் சேராத நபும்ஸகத்தன்மை தீவினையின்பயனும் தன்னில்தானே வெறுக்கத்தக்கதும் பிறர்பரிகசிக்கத்தக்கது மாதல் வெளிப்படை; ("உம்மை, வலியாற் பிறர் மனைமேற் சென்றாரே இம்மை, அலியாகி யாடியுண்பார்", "பேடிப்பெயர் நாமோபெறுவோமென் றெழில்வடிவம், வாடிப்பெரிதுளநொந்தணிமாசற்ற தொர்துசால், மூடி", "ஏயே இவளொருத்திபேடியோவென்றார்" என்பன காண்க.) தறுகண்மையாவது - அஞ்சத்தக்கன கண்டவிடத்து அஞ்சாமை. இது ஓரளவிற்பட்டதாயின் "கல்வி தறுகண் இசைமை கொடையெனச, சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே," "பரப்பமைந்த,தானைக்குச் செல்சார் தறுகண்மை" என வீரத்தினிலக்கணமாகச் சிறப்பித்துக் கூறப்படும். இது தானே அளவுகடந்ததாயின்,"அஞ்சுவதஞ்சாமை பேதைமை" என்று பழிக்கப்படும். இவ் வரம்புகடந்ததறுகண்மையே இங்கு 'கழிதறுகண்மை' எனப்பட்டது. அது பேடித்தன்மையைக்காட்டிலும் மிகவெறுக்கத்தக்க தென்றார்,பழிபாவங்களையும் கேட்டையும் விளைத்தலால். அது ஆண்மைக்குணத்தின்பாற்படாதென்பதை நன்குவிளக்குதற்கு, 'பேடியிற்றுவ்வாது'என்றார். அலியைக் கூறாது பேடியைக் கூறியது,அத்தன்மை மேல்நோக்கிலாயினும் ஆண்மையாகக் கருதப்படும், இது அத்தன்மையதுமன் றென்பதனால். 'கழி தறுகண்மை' என்றது, அஞ்சாமைமிகுதியால் ஆலோசனையின்றித் தீய செயல்களைச் செய்தலளவுங் குறிக்கும்.

கழி தறுகண்மை - உரிச்சொல்தொடர்.

(பழையவுரை.) எ-து. இடமுங்காலமும்அறியாது மிக்க தறுகண்மை, பேடித்தன்மையின் நீங்கியொழியாது; எ - று.—[கழி - மிகுந்த. தறுகண்மை - அஞ்சாமை.] (௩௨)

3.—(இ - ள்.) நாண் இல் வாழ்க்கை-நாணத்தையிழந்து(உணவுபெற்றுஉண்டு) உயிர்வாழும் வாழ்வானது, பசித்தலின் துவ்வாது - (உணவுகிடையாமையாற்) பசித்திருந்துவருந்துதலினும் வெறுக்கத்தக்கது; (எ - று.)

உணவின்றிப்பசித்திருத்தல் மிகவருத்தந்தருவதென்பது, வெளிப்படை; அதனினுங் கொடிது நாணமிழந்துவாழ்தல் என்றதற்குக் காரணம் - ஒருகாலுண்டான பசியைப் பின்னர்உணவுண்ணுதலாற் போக்கிக்கொள்ளலாம்: ஒருமுறைநாணமிழந்ததனால்நேர்ந்த அவமானத்தையோ பின்பு எவ்வாற்றாலும் பரிகரிக்கமுடியாது எனக் காண்க. அன்றியும்,பசித்தல் அப்பொழுதைத துன்பமே; நாணற்றவாழ்வோ எப்பொழுதைக்கும் நீங்காததுன்பத்தைக் கொடுக்கு மென்க. இதுபற்றியே, "நாணா லுயிரைத்துறப்பர் உயிர்ப்பொருட்டால், நாண்துறவார் நாணாள்பவர்" என்று திருவள்ளுவனாரும், "உயிரினுஞ் சிறந்தன்று நாணே"என்று தொல்காப்பியனாரும் கூறினர்.

வாழ்க்கை -'கை'விகுதிபெற்ற தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ - து. * நாணிழந்துஉண்டுவாழும்வாழ்க்கை,பசித்தலின் நீங்கியொழியாது; எ - று. (௩௩)

4.—(இ - ள்.) பேண் இல் ஈகை அன்பில்லாத கொடையானது, மாற்றலின் துவ்வாது-கொடையில்லாதிருத்தலினும் வெறுக்கத்தக்கது;(எ-று.)

அகத்துஅன்புடையராய் இனியபார்வையையும் முகமலர்ச்சியையுங் கொண்டு இன்சொற்பேசி ஈதலே, தானத்தி னிலக்கணம்; அத்தன்மைத்

---

* 'நாணழிந்து' என்று பிரதிபேதம்.

தான அன்பு இல்லாமல் டம்பத்திற்காகவாவது நிர்ப்பந்தத்தினால் வெறுப் புடனாவது கொடுத்தலானது கொடாதுலோபஞ்செய்தலினுங்கொடிதென் பதாம். கைப்பொருளைச் செலவுசெய்தும் புகழும் புண்ணியமு மாகிய நற்பயன்களைப் பெறாத வில்லாமையால், அன்பிலாக்கொடை இவ்வாறு இழித்துரைக்கப்பட்டது.

பேண் - பேணுதல்: அன்புசெய்தல், விரும்புதல்; முதனிலைத்தொழிற் பெயர். ஈகை - 'கை'விகுதிபெற்ற தொழிற்பெயர். மாற்றல் - இல்லையெ ன்னுதல்; இச்சொல் இப்பொருளதாதலை, 'ஈகையாவது - வறியராய் எற் றார்க்கு மாற்றாதுகொடுத்தல்' எனப் பரிமேலழகருரைநடையிலுங் கா ண்க: எனவே, மாற்றலென்பது - கொடாமையாயிற்று.

(பழையவுரை.) எ-து. * விருப்பமில்லாத ஈகை,ஈகைமாறுதலின் நீங்கி யொழியாது; எ - று. (௩௪)

5.—(இ - ள்.) செய்யாமை மேற்கோள் - தான்செய்யத்தகாதசெயல் களை மேற்கொண்டுசெய்யத்தொடங்குவது, சிதடியின் துவ்வாது - பேதை மையினும் வெறுக்கத்தக்கது; (எ - று.)

பேதைமையாவது - யாதொன்றும்அறியாமை; அதன் இழிவு, வெளிப் படை. ஒருவன் ஆராய்ச்சியின்றிச் செய்யத்தகாதசெயல்களைச் செய்வதாக ஏற்றுக்கொண்டு தொடங்குவது பேதைமையினும் அருவருக்கத்தக்கது என் பதாம். செய்யத்தகாதனவாவது-இம்மைமறுமைகளில்நன்மைவிளையாதன வென்று நூல்களில் விலக்கிய செயல்களும், செய்தாற் பயனில்லாதன வும், பயன்சிறிதாயினவும், பயன்ஐயமாயினவும், பின்னே துயரம்விளைப் பனவு மாம். இவற்றை விரும்பிச்செய்தால் இம்மைமறுமைகளில்அடையுந் தீங்குபெரிதாதலால்,இது,பேதைமையினுங் கொடியதாயிற்று. "செய்தக்க வல்ல செயக்கெடும்," "பேதைமையுளெல்லாம் பேதைமை காதன்மை, கையல்லதன்கட் செயல்" என்றார் திருவள்ளுவரும்.

'செய்யாமை' என்பது - செய்யத்தகாதசெயல்களுக்கு எதிர்மறைத் தொழிலாகுபெயர். மேற்கோள் - ஏற்றுக்கொள்ளுதல்: மேற்கொள் என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்.சிதடனெனினும்,சிதடியெனினும்ஒக்கும்; அறிவிலானென்றுபொருள்: அது-முதலாகுபெயராய்,அவனதுதன்மையின் மேல் நின்றது. அன்றி, சிதடன் - அறிவிலான், அவனதுதன்மை - சிதடி யென்றலுமாம்.

(பழையவுரை.) எ - து. செய்யத்தகாதனவற்றைமேற்கொண்டுசெய் யத் †தொடங்குவது,மையற்றன்மையின் நீங்கியொழியாது; எ-று.—[சிதடி- மூடத்தன்மை.] (௩௫)

6.—(இ - ள்.) பொய் வேளாண்மை - உண்மையாகஉபகாரஞ்செய்யா மல் உபகாரஞ்செய்பவர்போல நடிப்பது, புலைமையின் துவ்வாது - நீசத்தன் மையினும் வெறுக்கத்தக்கது; (எ - று.)

புலைமை - நற்குணங்கள்யாவுமில்லாதகீழோராது தன்மை; சண்டா ளத்தன்மையுமாம். உபகாரஞ்செய்யாமலாவது அபகாரஞ்செய்துகொண் டேயாவது உபகாரஞ்செய்பவர்போல வெளிக்குக்காட்டியொழுகுபவர் மிக வும்அதம ரென்பது கருத்து. இக்கருமசண்டாளர் ஜாதிசண்டாளரினும் இழிந்தவரென்க. 'புலையிற்றுவ்வாது' என்றும் பாடமுண்டு; அதற்கு - புலா

---

* 'விருப்பமில்லாதகொடை,கொடையைநீக்குதலின்ஒழியாது'என்று பிரதிபேதம்.

† 'தொடங்குமது' என்று பிரதிபேதம்.

னுண்ணுதலினும் இன்னாதென்பது பொருள். வேளாண்மை - உபகாரியாந் தன்மை.

(பழையவுரை.) எ - து. * பொய்ப்பட்டஉபகாரம், புலைமையின் நீங்கியொழியாது; எ - று.—[வேளாண்மை-உபகாரம். புலைமை - இழிவு.] (நசு)

7.—(இ - ள்.) கொண்டு கண்மாறல் - (ஒருவனை ஒருவன் நட்பாகக்) கொண்டு (அந்நிலையிலேயே அவனிடம்) கண்ணோட்டத்தை யொழிதல், கொடுமையின் தவ்வாது-கொடுந்தன்மையினும் வெறுக்கத்தக்கது; (எ-று.)

கண்ணோட்டமாவது - தன்னோடுபழகியவரைக் கண்டால் அவர்சொன்னவற்றை மறுக்கமாட்டாமை. "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சுமுண்பர் நனிநாகரிகர்" என்றபடி நண்பரிடத்து அதிகதாக்ஷிண்யம் பாராட்டுதல், கண்ணோட்டமுடையாரியல்பு. இங்ஙனமிருக்க, ஒருவரோடு சிநேகமாயொழுகுகையிலேயே அவரிடம் கண்ணோட்டமின்றி நடப்பது, மிக்க கொடுமை யென்பது கருத்து. கண் - கண்ணோட்டத்துக்கு ஆகுபெயர்.

(பழையவுரை.) எ-து. ஒருவனை ஒருவன் நட்பாகக்கொண்டுவைத்துக் கண்ணோட்டத்தைமாறுதல், கொடுமையின் நீங்கியொழியாது; எ - று.—[கண்ணோட்டம் - தாக்ஷிண்யம்.] (நஎ)

8.—(இ - ள்.) அறிவு இலி துணைப்பாடு - அறிவில்லாதவனைத் துணையாகக்கொள்ளுதல், தனிமையின் தவ்வாது - தனித்திருத்தலைக்காட்டிலும் வெறுக்கத்தக்கது; (எ - று.)

"துணைநலமாக்கந்தரூஉம்". "துணையோடல்லது நெடுவழிபோகேல்" என்றபடி துணைவரையுடைமை ஒருவனுக்கு நன்மைதருவதென்பரேனும், "பெரியாரைத் துணைக்கொள்" என்றபடி அறிவிற்சிறந்த பெரியோரைத் துணைக்கொள்வது நன்மைதருவதாகுமே யன்றி அறிவில்லாதாரைத்துணைக்கொள்வது நன்மைதராமையோடு பலவகைத்தீமைகளையும் விளைக்குமாதலால், அதனினும் யாதொருதுணையுமின்றித் தனித்திருத்தலே மேலென்பதாம். பேரறிவுடையார் துணைவராயின் தீநெறியினின்று விலக்கி நன்னெறியிற் செலுத்துவர்: அறிவிலாதாரோ நன்னெறியினின்று விலக்கித் தீநெறியிற் செலுத்துவர்; ஆதலின், அவரது துணைமை மேலானதன்றென்க. இவ்வகையான செயற்கைத்தீமைக்கு இடமின்றாதலின், தனிமையே மேலாம். திருவள்ளுவனார் திருக்குறளில் 'பெரியாரைத்துணைக்கோடல்,' 'சிற்றினஞ்சேராமை' என அதிகாரங்கள்வகுத்திருத்தல் காண்க. "இணக்கமறிந் திணங்கு," "மூர்க்கரோ டிணங்கேல்," "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்பனவும் நோக்கத்தக்கன.

இலி, இ - பெயர்விகுதி. துணைப்பாடு - துணைப்படு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ-து. அறிவில்லாதானொருவனோடு துணைப்பாடு, தனிமையின் நீங்கியொழியாது; எ - று. (நஅ)

9.—(இ - ள்.) இழிவு உடை மூப்பு-இகழப்படுந்தன்மையையுடையகிழத்தனமானது, கதத்தின் தவ்வாது-கோபத்தினும்வெறுக்கத்தக்கது; (எ - று.)

("செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்து, மில்லதனிற் றீயபிற", "மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய, பிறத்த லதனான் வரும்", "என்றும், விடல்வேண்டுந் தன்கண்வெகுளி", "வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை, வெகுளியே குணந்தவம்விரதமாய்க்குமால், வெகுளியே அறிவினைச் சிதைக்கும் வெம்மைசால், வெகுளியிற்கொடும்பகை வேறொன்றில்லையால்" என்னும்படி) கோபமாகியகுற்றம் மிகக்கொடிதென்பது வெளிப்

* 'பொய்ப்பட்ட' என்று பிரதிபேதம்.

படை. வலிமையின்மையாற் செய்வனசெய்யமாட்டாமை முதலியனபற்றி இகழத்தக்கதாகின்ற கிழத்தனம் அக்கோபத்தினும் அருவருக்கத்தக்கதென அதன் எளிமையை விளக்கினர். இனி,இழிவுஉடை மூப்பு-இழிவான குணங்களுடனே ஒருவன் பிராயம் முதிர்வனுயின் அத்தன்மை யெனினுமாம்.

மூப்பு - 'பு'விகுதி பெற்ற தொழிற்பெயர். 'இளிவுடை' என்பதும் பாடம்.

(பழையவுரை.) எ - து. * இழிவினையுடைய மூப்பு, † பிறர்வெறுத்து வெகுளும் வெகுட்சியின் நீங்கியொழியாது; எ - று.—[கதம் - வெகுட்சி, கோபம்.] (௯)

10.—(இ - ள்.) தான் ஓர் இன்பு உறல் - (ஒருவன் விருந்தினர் சுற்றத்தார் நண்பர் என்னும்இவருடன் இன்பமடைத லின்றித்) தான்மாத்திரமே இன்பமடைந்து வாழ்தலானது, தனிமையின் துவ்வாது - வறுமையினும் வெறுக்கத்தக்கது; எ - று.)

"விருந்துபுறத்ததாத் தானுண்டல் சாவா,மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று", "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்றபடி ஒருவன் தனக்குக்கிடைத்த நல்லுணவுமுதலியவற்றை விருந்தினர் சுற்றத்தார் நண்பர் முதலியோரும் தானுமாக நுகர்ந்து இன்பமடைதலே தகுதி: அங்ஙனமன்றித் தானே தனியனுய் நுகர்ந்து மகிழ்தல் வறுமையினுங் கொடிதென்பதாம்; "இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய. தாமே தமிய ருணல்" என்ற திருக்குறள் இங்கு நோக்கத்தக்கது. வறுமைக்குஉள்ளது அப்பொழுதையிழிவுமாத்திரமே, மற்றும் அதனல் வறுமைவிளைத லில்லை; தானேஇன்புறுதற்கு அப்பொழுதையிழிவோடு மற்றும்வறுமைவிளைதலும் உள தாதலால், வறுமையினும் இது இன்னு தென்க. தனிமை - பொருளின்மை. 'தானோரின்பு தனிமையிற்றுவ்வாது' என்றும், 'தானோரின்புறல் வறுமையிற்றுவ்வாது' என்றும் பாடமுண்டு.

(பழையவுரை.) எ-து. தானேஒருவன் இன்புறுதல்,வறுமையின் நீங்கியொழியாது; எ - று. (௧0)

துவ்வாப்பத்து முற்றிற்று.

---

ஐந்தாவது

## அல்ல பத்து.

இப்பகுப்பிலுள்ள பத்துமுதுமொழிகளும் 'அல்லள்', 'அன்று', 'அல்லன்' என்னும் எதிர்மறைமுற்றுக்களுள் ஒன்றைக் கொண்டு,அன்மைக்குரிய பொருள்களைக் கூறுதலால், இதற்கு 'அல்லபத்து' என்று பெயராயிற்று; அல்லாதபொருள்களைக் கூறும் பத்துவாக்கியங்க ளென்க: இரண்டனுருபும்பயனுந்தொக்க தொகை. அல்ல - அன்மையென்னும் எதிர்மறைப்பண்பினடியாப் பிறந்த பலவின்பாற்பெயர்.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனிதரெல்லார்க்கும்,—நீர் அறிந்து ஒழுகாதாள்-(தன் கணவனுடைய) குணத்தை யறிந்து (அதற்குஏற்ப) நடவாதவள், தாரம் அல்லள் - தக்கமனைவியாகாள்; (எ - று.)

"கொண்டான்குறிப்பறிவாள்பெண்டாட்டி . , .. . ,பெய்யெனப்பெய்யம்மழை" என்றபடி தனக்குத்தெய்வமாகிய கணவனது குணத்தை யுணர்

---

*'இளிவரவினையுடைய'என்றும், † 'பிறரைவெறுத்து'என்றும் பிரதிபேதம்.

ந்து அதற்கேற்ப ஒழுகுகின்ற கற்புடையவளே இல்வாழ்க்கைக்குத் துணையாதற்கு ஏற்ற உத்தமபத்தினியென்று சிறப்பித்துக்கூறத்தக்கவ ளாதலால், அங்ஙனம்ஒழுகாது தன்மனம்போனபடி நடப்பவள் இல்வாழ்க்கைத் துணைவியான மனைவி யென்னும் பெருமைக்கு உரியளாகா ளென்க.

நீர் - நீர்மை யென்ற பண்பி னடி. ஒழுகாதாள்—த் - எழுத்துப்பேறு. தாரம் - தாராஃ என்ற வடசொல்லின் விகாரம். 'ஒழுகாடாரமல்லள்' என்றும் பாடமுண்டு.

(பழையவுரை.) எ-து. ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்து மக்கட்கெல்லாம், கொழுநனது குணமறிந்தொழுகாதாள் மனையாளல்லள்; எ - று.—[நீர் - குணம்.] (சக)

2.—(இ - ள்.) தாரம் மாணாதது - மனையாள் நற்குணநற்செய்கை யுடையவளாகப்பெறாத இல்லறவாழ்வானது, வாழ்க்கை அன்று - அவ்வாழ் வென்று சிறப்பித்துச்சொல்லத்தகாததாம்; (எ - று.)

நற்குணங்கள் - துறவிகளிடத்துஅன்பும், விருந்தினரிடத்து விசுவாசமும், வறியவரிடத்துஅருளுடைமையும் முதலியன. நற்செய்கைகள் - வாழ்க்கைக்குவேண்டும்பொருளறிந்துகடைப்பிடித்தலும், உணவுசமைக்குந்திறமும், உபகாரஞ்செய்தலும் முதலியன. 'வாழ்க்கையன்று' என்றது, பயன் படாதென்னுங் கருத்துப்பற்றி. "மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, எனைமாட்சித்தாயினு மில்", "இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதென், இல்லவள் மாணாக்கடை" என்ற திருக்குறட்பாக்கள் இங்கு நோக்கத்தக்கன.

மாணாதது - மாட்சியென்னும்பண்பினடியாப்பிறந்த எதிர்மறையொன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர்; 'மாண்' என்ற பண்படி - பகுதி, து - விகுதி, ஆ - எதிர்மறையிடைநிலை, த் - எழுத்துப்பேறு; (து - சாரியை, உகரங்கெட்ட தென்றலுமாம்:) அ - சாரியை.

(பழையவுரை.) எ - து. மனையாள்மாட்சிமைப்படாத மனைவாழ்க்கை, மனைவாழ்க்கையன்று; எ - று.—[மாண்பு - சிறத்தல்.] (சஉ)

3.—(இ - ள்.) ஈரம் அல்லாதது - (மனத்தில்)அன்புடையதன்றாயிருப்பது,கிளை நட்பு அன்று-உறவினர்தருமமும் சிநேகதருமமும் ஆகாது;(எ-று.)

அன்புடைமை, உறவினர்க்கும் நண்பர்க்கும் இன்றியமையாக்குணமென்பதாம். "விருப்பறாச்சுற்றம்", "நெஞ்சத், தகநகநட்பது நட்பு" என்றார் திருவள்ளுவரும்.

அல்லாதது - உடையதாகாதது: இப்பெயரில் 'அல்' என்ற பண்படியே எதிர்மறைகுறித்தலால், ஆ - சாரியை. கிளை - மரத்தைக் கிளைபோல ஒருவரைத் தழுவிநிற்கும் உறவினர்; உவமையாகுபெயர்: இலக்கணையாய், அவரியல்பைக் குறித்தது. நட்பு என்ற தொழிற்பெயரில், நள் - பகுதி, பு - விகுதி. 'ஈரமல்லாதது கிளை நட்பு அன்று' என்று பண்பின்மேல்வைத்துக் கூறினாராயினும், அகத்தில்அன்பில்லாதவர் சுற்றத்தாரும் நண்பரு மாகார் என்பதே கருத்து. 'ஈரமல்லது'என்றும், 'ஈரமில்லது' என்றும் பாடமுண்டு.

(பழையவுரை.) 'ஈரமில்லாதது' என்று பாடம். எ - து. மனத்தின்கண் ஈர மில்லாதது கிளையுமன்று,நட்புமன்று; எ-று.—[கிளை-சுற்றம்.](சங)

4.—(இ - ள்.) சோரம் கையன் - களவுசெய்யுங் கையையுடையவன், சொல் மலை அல்லன் - புகழ்பெறுபவ னல்லன்; (எ - று.)

பிறர்பொருளை வஞ்சித்துக்கவரு மியல்புடையான் மற்றைநற்குணநற்செயல்களில் எவ்வளவுஉடையனாயினும் அதனாற் புகழ்பெறா னென்பதாம். இத்தீச்செயலொன்று எல்லாப்பெருமைகளையும்ஒழிக்கு மென்க. 'சொல்

மலை' என்றதை "குணக்குன்று" என்றாற்போலக் கொள்க; சொற்கள்நிறைந்த மலை யென்க. சொல்-புகழ்ந்துகூறுஞ் சொற்கள். சொல்என்பது புகழின் மேலதாதலை,"சொன்மாண்பமைந்த குழூ"எனச் சிந்தாமணியிலுங் காண்க. திருமுருகாற்றுப்படையில் "அறிந்தோர்சொன்மலை"என்றதற்கு-நச்சினார்க்கினியர் 'சான்றோர் புகழ்ந்துசொல்லப்படுஞ் சொற்களின் ஈட்டமாயிருப்பாய்' என்று உரைகூறியுள்ளார்.

சோரம்-வடசொல். 'சோராக்கையன்' என்றும் பாடமுண்டு: அதற்கு-பிறர்க்கு ஒன்றைக் கொடுத்தலில்லாத கைகளையுடையவனென்பது பொருள்; சோர்தல் - சொரிதல்: 'அவன் புகழ்பெறான்' என்றது, புகழ்பெறுதற்குக் கல்வி ஆண்மை முதலிய வேறுகாரணங்க ளிருந்தாலும் ஈகையே சிறத்தலால்; அதுபற்றியே, திருவள்ளுவர் 'ஈகை' என்னும் அதிகாரத்தின் பின் 'புகழ்'என்னும்அதிகாரத்தை வைத்து, 'புகழ்' என்னும் அதிகாரத்தில் "ஈத லிசைபடவாழ்தல்" என்றும், "இரப்பார்க்கொன், றீவார்மேல் நிற்கும் புகழ்" என்றும் கூறினர்.

(பழையவுரை.) 'சோராக்கையன்' என்பது பாடம். எ - து. பிறர்க்கு ஒன்றையுதவாத கையையுடையோன்,புகழைத்தாங்கமாட்டான்; எ - று.—[சோர்தல் - நெகிழ்தல்.] (சச)

5.—(இ - ள்.) நேரா நெஞ்சத்தோன் - (ஒருவன்கருத்திற்கு) இணங்காத [மாறுபட்ட] மனத்தையுடையவன், நட்டோன் அல்லன் - (அவனுக்குத் தக்க) நண்பனாகான்; (எ - று.)

மனவொற்றுமையே சிநேகத்திற்கு முக்கியகுண மாதலின், இங்ஙனங் கூறினார். "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாங்கிழமை தரும்", "மனத்தினமையாதவரை யெனைத்தொன்றுஞ், சொல்லினாற்றேறற்பாற்றன்று" என்றார் திருவள்ளுவரும்.

நேரா - ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம்.

(பழையவுரை.) எ - து. வேறாய் உடன்படாத நெஞ்சத்தோன்,நண்புடையனல்லன்; எ - று.—[நட்டோன் - சிநேகிதன்.] (சரு)

6.—(இ - ள்.) தேராமல் கற்றது - தெளிவான அறிவுஉண்டாகாதபடி படித்தது, கல்வி அன்று - படிப்பாகாது; (எ - று.)

"கற்க கசடறக் கற்பவை" என்றபடி சந்தேகவிபரீதங்களின்றிப் பொருள்கள் தெளிவாகவிளங்குமாறு கற்றது கல்வியாமே யன்றி, அங்ஙனந்தேர்ந்தஞானம்பெறாதபடிப்புப் படிப்பெனத்தக்கதன்று என்பதாம். தேராமல் - தெளியாமல். 'நேராமற்கற்றது' என்ற பாடத்திற்கு - (ஆசிரியனுக்குப்)பொருள்கொடாது கற்றதென்று பொருள்; கல்விசித்தித்தற்குக் குருதக்ஷிணை கொடுத்தல் இன்றியமையாதென்பது கருத்து: "இனியதுகொடுத்தே யெழுத்தையறி" என்ற கல்வியொழுக்கத்தைக் காண்க; "பொருள்நனி கோடுப்போன் வழிபடுவோனே, உரைகோளாளற்கு உரைப்பது நூலே" என்றார் நன்னூலார்.

(பழையவுரை.) 'நேராமைக்கற்றது'என்று பாடம். எ - து. கற்பிக்கும் ஆசிரியனுக்கு ஒன்றைக்கொடாது கற்குமது, கல்வியன்று; எ-று.—['தேராமை' எனவும் பாடம்.] (சசு)

7.—(இ - ள்.) வாழாமல் வருந்தியது - தன்வாழ்வை வேண்டாமல் [பிறவுயிர்கள்வாழ்வதை வேண்டி] (ஒருவன் தான்) வருந்தியது, வருத்தம் அன்று - துன்பத்தின்பாற்படாது; (எ - று.)

தமக்குவருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களைப் பாதுகாத்தல் பெரியோரியல் பாதலால், அவர் தமக்குநேருந் துன்பங்களைப் பொருள் செய்யா ரென்பதாம். ("தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்", "தனக்கென் றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதிசூழ்ந்தான்", "தன்னுயிர்க்

கிரங்கான் பிறவுயிரோம்பும், மன்னுயிர்முதல்வன்" என்பன இங்குக் கருதத்தக்கன.) இனி, இல்லறத்தில் வாழாமல் துறவறவொழுக்கத்தில் வருந்தியது வருத்தமெனத்தக்கதன்று என்று உரைத்தலு மொன்று.

(பழையவுரை.) 'வாழாமைவருந்தியது' என்று பாடம். எ - து. * தன் உயிர்வாழாமை வருந்தியது வருத்தமன்று; எ - று. (௬௭)

8.—(இ - ள்.) அறத்து ஆற்றின் ஈயாதது - தருமவழியாற்கொடாதது, ஈகை அன்று - தானமாகாது; (எ - று.)

தருமசாஸ்திரங்களிற்கூறிய முறைப்படி நல்வழியாற்சம்பாதித்த பொருளை 'ஸத்பாத்ரம்'எனப்படுகின்ற தக்கவர்க்கு மனமகிழ்ச்சியோடு கொடுப்பது தானமாகுமே யன்றி,எவ்வகையாலேனும் தன்கைப்பொருளைப் பிறன் கையிற்புகுத்துதல்மாத்திரமே தானமென்னும் பெருமையைப் பெறாது என்பதாம். 'தானமாவது - அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல்' என்றார் திருக்குறளுரையிற் பரிமேலழகரும்." அறத்து ஆறு - தர்ம மார்க்கம்; அத்து - சாரியை.

(பழையவுரை.) எ - து. அறத்தின்நெறியின் ஈயாதது ஈகையன்று; எ - று.—[ஈகை - பயன்கருதாதுகொடுத்தல்.] (௬௮)

9.—(இ - ள்.) திறத்து ஆற்றின் நோலாதது - (தம்தமது) சாதிக்கும் ஆச்சிரமத்துக்கும் உரிய வகையால் தவஞ்செய்யாதது, நோன்பு அன்று - தவமாகாது; (எ - று.)

வருணாச்சிரமங்களுக்கு ஏற்றபடி விரதங்களை அநுட்டிப்பது தவத்தின்முறைமையே யன்றி அதற்குமேற்படவாவது கீழ்ப்படவாவது அநுட்டிப்பது தவத்தின்இலக்கணமன்று என்பதாம். திறம் - கூறுபாடு. இனி, 'திறத்து ஆற்றின் நோலாதது'என்பதற்கு - மனவுறுதியுடன் செய்யாத தவமென்று உரைத்தலும் அமையும்; "நேரா நோன்பு சீராகாது"என்றனர் ஒளவையார். வெயில் மழை பனி முதலியவற்றால் வருந்துன்பங்களைப் பொருள் செய்யாமற் பொறுத்திடும் உறுதி தவத்திற்குஇன்றியமையாமையும் உணர்க.

(பழையவுரை.) எ - து. தன் குலத்திற்கும் நிலைமைக்குந் தக நோலாதது தவமன்று; எ - று.—[நோற்றல் - விரதங்காத்தல்.] (௬௯)

10.—(இ - ள்.) மறு பிறப்பு அறியாதது - மறுபிறப்பையறிந்து தருமவழியில்நடவாமலே பிராயம்முதிர்ந்துவிட்டது, மூப்பு அன்று - முதுமையென்னுஞ் சிறப்புக்கு உரியதாகாது; (எ - று.)

மறுபிறப்பும் இருவினைப்பயன்களும் கடவுளும் சுவர்க்கம்முதலிய லோகாந்தரங்களும் முத்தியும் உண்டென்று உண்மையுணர்ந்து அந்தத்தத்துவ ஞானத்திற்கு ஏற்றபடி நல்வழியி லொழுகி வயதுசென்றால் அந்நிலைமையுடையோர் பெரியவரென்றுகொண்டாடத்தகுவரே யன்றி,இவ்வகைமெய்யுணர்வில்லாமல் வெறும்பருவமுதிர்ச்சிமாத்திரமுடையார் பெரியரென்று கொண்டாடத்தகா ரென்பதாம். வயோவ்ருத்தரினும் ஞானவ்ருத்தர்க்கும் சீலவ்ருத்தர்க்கு முள்ள மேம்பாடு விளக்கப்பட்டது. மறுபிறப்பைக் கூறியது, மற்றவற்றிற்கும் உபலக்ஷணம். இப்பிறப்பில் தீவினைசெய்தால் அதன்தீயபயனை மறுபிறப்பில்அநுபவிக்கவேண்டியதாகுமேயென்பதுகருதி அஞ்சுதல் வேண்டு மென்க. 'மாறிப்பிறப்பறியாதது' என்று சிலபிரதிகளிற் பாடங் காணப்படுகின்றது.

(பழையவுரை.) எ-து. மறுபிறப்பை யறிந்து அறத்தின்வழியொழுகாதே மூத்த மூப்பு, மூப்பன்று; எ - று. (௭0)

அல்லபத்து முற்றிற்று.

---

* 'தானுயிர்வாழாமை' என்று பிரதிபேதம்.

## ஆறாவது
# இல்லைபத்து.

இப்பகுப்பிலுள்ள முதுமொழிகள்பத்தும் 'இல்லை' என்னுஞ் சொல்லைக் கொண்டனவாய் இல்லாதபொருள்களைக் கூறுதலால், இப்பகுப்பிற்கு 'இல்லைபத்து' என்று பெயராயிற்று. இல்லையென்றுகூறிய பத்து எனக;மத்தியமபதலோபம். 'இல்லைப்பத்து'என்றும்,'இல்லபத்து'என்றும் பிரதிபேதமுண்டு.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனித ரெல்லார்க்கும்,—மக்கள் பேற்றின் - புத்திரரைப் பெறுகின்ற பாக்கியத்தைக்காட்டிலும், பெறும் பேறு இல்லை - பெறத்தக்க பாக்கியம் வேறில்லை; (எ - று.)

இராசாங்கம் மக்கள்[சந்தானம்] சுற்றம் பொன் மணி நெல் வாகனம் அடிமை என்ற அஷ்டஐசுவரியங்களுள் சந்தானத்திற்கு உள்ள சிறப்பை எடுத்துக்கூறினர். அதனாலுண்டாகும் இம்மைமறுமைப்பயன்கள் பலவாதலைப் பலநூல்களிற் காணலாம்; திருவள்ளுவரும் திருக்குறளிற் புதல்வரைப்பெறுதலென்னும்அதிகாரத்தில் விளக்கினர்: "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்லபிற"என்ற திருக்குறள், இங்கு நோக்கத்தக்கது. 'தனிமரம் தோப்பாகாது, தனிப்பிள்ளை பிள்ளையாகாது' என்ப வாதலால், 'மக்கள்'எனப் பன்மையாற் கூறினர்; திருவள்ளுவரும் 'புதல்வரைப் பெறுதல்' என்றார். 'பெரும்பேறு'என்ற பாடத்துக்கு-பெரிய பாக்கிய மென்று பொருள்.

மக்கட்பேறு - புத்திரபாக்கியம். மக்களைப் பெறுத லெனக் கொண்டால், இரண்டாம்வேற்றுமைத்தொகை; பேறுஎன்பது - பெறுஎன்னும்முதனிலை திரிந்த தொழிற்பெயர். புத்திரராகிய செல்வ மென்று கொண்டால், பண்புத்தொகை; அப்பொழுது,'பேறு'என்பது, பெறுஎன்னும்பகுதி செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெடப்பெற்று முதல் நீண்ட பெயர்;பெறப்படுவது எனக.இருவழியிலும் உயர்திணைப்பெயரீறு விகாரமாயிற்று.மக்கட்பேற்றின்-மக்கட்பேறுபோல எனினுமாம்; முந்தினவுரையில்,'இன்'என்ற ஐந்தனுருபு - எல்லைப்பொருளது: இவ்வுரையில், ஒப்புப்பொருளது; 'காக்கையிற் கரிது களம்பழம்' என்றாற்போல. 'மக்கள்'என்றசொல்-முதலடியில் மனிதரென்றபொருளிலும்,இரண்டாமடியிற் புதல்வரென்றபொருளிலும் வந்தது.

இனி, இம்முதுமொழிக்கு - மநுஷ்யஜந்மம்வாய்த்தலைக்காட்டிலும் பெறத்தக்கபாக்கியம் வேறில்லை யென்று உரைத்தலு மொன்று; இந்திரன் முதலிய இறையவர்பதங்களையும் அந்தமிலின்பத்துஅழிவில்வீட்டையும் நெறியறிந்தெய்துதற்கு உரியவர் அவரே யாதலால்: "அரிதரிது மானிடராத லரிது" என்றார் ஔவையாரும்.

(பழையவுரை.) எ - து. ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து மக்கட்கெல்லாம்,புதல்வரைப்பெறும் பேற்றிற் பெறும்பேறில்லை; எ - று.—[மக்களாய்ப் பிறக்கும் பிறவியிற் *பெறும்பேறில்லை யெனினும் அமையும்.] (௫௧)

2.—(இ - ள்.) ஒப்புரவு அறிதலின் - உலகநடையையறிந்து பிறர்க்கு உபகாரஞ்செய்தலைக்காட்டிலும், தகு வரவு இல்லை - தகுதியுள்ள செய்கை வேறில்லை; (எ - று.)

திருக்குறளில் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரப்பெயர்க்குப் பரிமேலழகர் 'அஃதாவது - உலகநடையினை யறிந்து செய்தல்; உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்துசெய்யுந் தன்

---

* 'பெரியபேறில்லை' என்று பிரதிபேதம்.



MAHAMAHOPADHYAYA

மைத்தாகலின்,'ஒப்புரவறிதல்' என்றார்' என்றுஉரைத்தது, இங்கு உணரத் தக்கது. ஒப்புரவு என்பதை ஒப்பு உரவு எனப் பிரிக்க; உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்ததொழி லென்றபடி. இதனது ஒப்புயர்வற்ற மிக்க சிறப்பு, இங்குக் கூறப்பட்டது. "புத்தேளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே, ஒப்புரவின் நல்ல பிற" என்றார் திருக்குறளிலும். அதனுரையிற் பரிமேலழகர் 'ஈவாரும் ஏற்பாரும் இன்றி எல்லாரும் ஒருதன்மைய ராதலின், புத்தேளுலகத்து [தேவலோகத்தில்] அரிதாயிற்று; யாவர்க்கும்ஒப்பது இதுபோற் பிறிதொன்று இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று' என்று காரணம் வகுத்துள்ளார். இனி, 'ஒப்புரவறிதல்' என்பதற்கு - தமதுபொருள்முதலியவற்றின் அளவிற்கு ஒப்பப் பிறர்க்குஉதவிசெய்யத்தக்கவற்றை அறிந்து செய்த லென்றும் பொருள்கொள்ளலாம்; திருக்குறள் மணக்குடியருரையில் 'ஒப்புரவறிதலாவது - இல்லென இரந்துவந்தார்யாவர்க்கும் வரையாதுகொடுக்கும் ஆற்ற லிலரெனினும் தன்அளவிற்கும் தன்வருவாயளவிற்கும் ஒக்கத் தக்கார்க்குத் தக்கனஅறிந்து கொடுத்தல்' என உள்ளது.

ஒப்புரவறிதலின் - ஒப்புரவறிதல்போல எனினுமாம். தகுவரவு-தகுதியாய்வருவது. "ஒப்புரவொழுகு" என்றார் ஔவையாரும்.

(பழையவுரை.) எ-து. செய்யக்கடவனசெய்கையோ டொக்குந் தகுதியில்லை; எ - று.—[ஒப்புரவு - உலகநடை.] (௩உ)

3.—(இ - ள்.) வாய்ப்பு உடை வழக்கின் - பொருளைத் தனதுஅதீனமாகவுடையனாயிருந்து நடத்தும் வியவகாரத்தைக்காட்டிலும், நல் வழக்கு இல்லை - நல்ல வியவகாரம் வேறுஇல்லை; (எ - று.)

வழக்காவது - ஒருபொருளைத் தனித்தனியே 'எனது எனது' என்று இருப்பவர்கள் அதுகாரணமாகத் தமக்குள்மாறுபட்டு அப்பொருளின்மேற் சொல்வது; இது, வடமொழியில் வ்யவஹார மெனப்படும். இங்ஙனம்மாறுபட்ட இருதிறத்தார் வழக்குநடத்துமிடத்து,எவனதீனத்திற் சொத்துஇருக்கின்றதோ அவனுக்கு, வழக்குநடத்தும்முறையும், அதில்வெற்றிவாய்ப்பதும் எளிதாகின்றன. ஆதலால், 'வாய்ப்புடைவழக்கின் நல்வழக்கில்லை' எனப்பட்டது. எதிரான முடிவு செய்தற்கு ஏற்ற ஆதாரங்கள் நிச்சயப்படாதவரையில், சொத்து, ஸ்வாதீநத்திலுடையவனதாகவே கருதப்படுதல், நீதிமுறை.* இனி, ஸாக்ஷிமுதலியன வாய்த்தலுள்ள வழக்கே நல்வழக்காமென்று உரைப்பினுமாம். இதற்குப் பழையஉரைகாரர் வேறுகூறுவர்.

வாய்ப்பு - பொருள்சித்தித்திருத்தல். வழக்கின் - வழக்குப்போல எனினுமாம்.

(பழையவுரை.) 'வாய்ப்புடைவிழைச்சினல்விழைச்சில்லை' என்பது பாடம். எ - து. மக்கட்பேறுவாய்த்த கலவிபோலுங் கலவியின் நல்லதில்லை; எ - று.—[விழைச்சு - கலவி.] (௩௩)

4.—(இ - ள்.) வாயா வழக்கின் - பொருளைத்தனது அதீனத்திலுடையனாகாதிருந்து நடத்தும் வியவகாரத்தைக்காட்டிலும், தீ வழக்கு இல்லை - கெட்ட வியவகாரம் வேறு இல்லை; (எ - று.)

இதன்கருத்து, முன்கூறியவாற்றால் விளங்கும். வற்புறுத்துதற்பொருட்டு, உடன்பாட்டுமுகத்தாற்கூறியதன்றி எதிர்மறைமுகத்தாலுங் கூறினார்; திருவள்ளுவர் கல்வியின்பின் கல்லாமையையுங் கூறினாற்போல: ஆகவே, முன்னர்க்கூறியதன் சிறப்பு நன்குவிளங்கும். வாயா வழக்கின் - சாக்ஷிமுத

*"Possession is nine points of law"என்பர் வழக்குநூலுடையாரும்.

லியன வாய்க்கப்பெறாத வியவகாரம்போல என்றலுமாம். இதற்கும் பழைய வுரைகாரர் வேறுகூறுவர்.

வாயா - வாயாத: ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம்.

(பழையவுரை.) 'வாயாவிழைச்சிற்றீவிழைச்சில்லை' என்பது பாடம். எ - து. மக்கட்பேற்றின்பொருட்டன்றிக்கலக்குங் கலவிபோலத் தீயதுஇல்லை; எ - று.—[வாயா - பொருந்தாத.] (௪)

5.—(இ - ள்.) இயைவது கரத்தலின் - (தான் பிறர்க்குக்) கொடுக்கக் கூடிய பொருளை இல்லையென்று சொல்லி லோபஞ்செய்தலைக்காட்டிலும், கொடுமை இல்லை - கொடியது வேறுஇல்லை; (எ - று.)

"இசையாவொருபொருளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத் தியற்கை"யாமேயன்றி, இசைவதுகரத்தல் அருளின்செயலாகாது பழிபாவங்களைவிளைத்து மறுபிறப்பில் வறுமையடைதற்குக் காரணமுமாகுதலால், 'அதனினுங்கொடுமை இல்லை' என்றார். இத்தன்மைபற்றியே, "இயல்வது கரவேல்" என்றார் ஔவையாரும்; "யாதுங், கரவன்மின் கைத்துண்டாம் போழ்து" என்றது நாலடி: திருநாவுக்கரசுநாயனார்தேவாரத்தில் "கரப்பவர்தங்கட்கெல்லாங் கடுநரகங்கள்வைத்தார்" என்றதுங் காண்க.

இயைவது - வினையாலணையும்பெயர். கரத்தல் - ஒளித்தல். 'இயல்வது கரத்தலின்' என்றும் பாடமுண்டு. கரத்தலின் - கரத்தல்போல வெனினுமாம்.

(பழையவுரை.) எ - து. தான் பிறர்க்குக்கொடுக்க வியலும் பொருளை இல்லையென்று கரக்குங் கரப்பிற் கொடுமையில்லை; எ - று.—[இயைதல் - பொருந்துதல். கரத்தல் - ஒளித்தல்.] (௫)

6.—(இ - ள்.) உரை இலன் ஆதலின் - புகழில்லாதவனா யிருத்தலைக் காட்டிலும், சாக்காடு இல்லை - (ஒருவனுக்கு)மரணம் வேறு இல்லை; (எ-று.)

பூதவுடம்புஅழியவும் புகழுடம்பு அழியாது என்றும்நிலைபெறுதலால், புகழ்பெறுதல் சிரஞ்சீவியாய்வாழ்தற்குச் சமானம்; அதாவது - ஒருவன்பெயர் அழியாது புகழினால் உலகத்தில் வழங்குகின்றவளவும் அவன் நிலைபெற்று வாழ்பவனாவன். ஆனதுபற்றி, "இந்நிலத்து, மன்னுதல்வேண்டின் இசை நடுக" என்பர். புகழ்பெறாதவன் உயிருடனிருந்தும் இறந்தவனோ டொப்பனென்க. "இசையொழிய, வாழ்வாரே வாழாதவர்" என்றார் திருக்குறளிலும்.

உரை - பலராலும் உரைக்கப்படுவது; இது, புகழ்க்குக் காரணவிடுகுறி. உரை - புகழாதலை, "உரைசால் பத்தினி", "உரைசா லடிகள்"எனச் சிலப்பதிகாரத்திலுங் காண்க. 'உணர்விலனாதலின்' என்றும் பாடமுண்டு. சாக்காடு-சாதல்: காடு - தொழிற்பெயர்விகுதி; வேக்காடு, நோக்காடு என்பவற்றிலும் இது.

(பழையவுரை.) 'உணர்விலன்' என்பது பாடம். எ - து. ஒருவற்கு அறிவின்மையோடொக்குஞ்சாக்காடில்லை; எ - று.—[சாக்காடு - மரணம்.]

7.—(இ - ள்.) நசையின் பெரியது - ஆசையினும் மிக்கதாகிய, ஓர் நல்குரவு - ஒரு வறுமை, இல்லை—; (எ - று.)

நல்குரவாவது - அனுபவிக்கப்படும்பொரு ளொவையு மில்லாமை. ஒருவன் பொருள்களினிடத்துஆசைகொள்ளுந்தோறும் தன்னிடம் அப்பொருளில்லாமையை மேற்கொள்ளுதலால், நசை நல்குரவாயிற்று; "நல்குரவென்னும் நசை" என்றார் திருவள்ளுவரும். அங்குப் பரிமேலழகர் 'நசையில்லரதவிடத்து வறுமையு மில்லையாதலால்,நல்குரவை நசையாக்கி' என உரைத்தது உணரத்தக்கது. ஆசையின் கொடுமை கூறியவாறு. "வேண்டாமை

யன்ன விழுச்செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்பதில்" என்பது இதன் எதிர். இனி, 'காணியாசை கோடிகேடு', 'அதிகஆசை அதிகநஷ்டம்,' "அதிக ஆசை மிகுதரித்திரம்' என்பனபற்றி, ஆசையினும் பெரியதொரு வறுமைக் காரணமில்லை யென்று உரைத்தலுங் கூடும்.

நல்குரவு - தொழிற்பெயர்; நல்கூர் என்ற பகுதி குறுகிற்று: அ - சாரியை, உ - விகுதி.

(பழையவுரை.) எ-து. ஆசையின் மிக்கதொரு வறுமை யில்லை; எ-று.—[நல்குரவு - தரித்திரம்.] (௭)

8.—(இ - ள்.) இசையின் பெரியது - புகழைக்காட்டிலும் மேம்பட்டதாகிய, ஓர் எச்சம் - நிலையுடைப்பொருளொன்று, இல்லை—; (எ - று.)

எஞ்சிநிற்பது எச்சம் எனக் காரணப்பெயர்; எஞ்சுதல் - சேடித்திருத்தல், மிச்சப்பட்டுநிற்றல்: ஒருவர்இறந்துபோனபின்பும் அவரதுபுகழ் தான் இறவாது எஞ்சிநிற்றலால், அது,எச்ச மெனப்படும்; "இசையென்னும் எச்சம்" என்பது, திருக்குறள். "ஒன்றாவுலகத் துயர்ந்தபுகழல்லாற், பொன்றாதுநிற்பதொன்றில்" என்றபடி உலகம் அழியுமளவும் அழியாதுநிலைத்திருப்பது புகழொன்றுதவிர வேறொன்றில்லை யாதலால், 'இசையிற்பெரியதோ ரெச்ச மில்லை' எனப்பட்டது.

(பழையவுரை.) எ - து. புகழுடைமையின்மிக்குப் * பிற்பயப்பதோர் ஆக்கம் ஒருவற்கு இல்லை; எ - று.—[எச்சம் - செல்வம்.] (௮)

9.—(இ - ள்.) இரத்தலின் ஊங்கு - யாசகஞ்செய்து ஜீவித்தலைக்காட்டிலும் மேற்பட்ட, இளிவரவு-அவமானமுண்டாகத்தக்ககாரியம், இல்லை—.

யாசிப்பது மிக்க மானக்கேட்டை விளைத்து வருத்துதலால், இங்ஙனங் கூறப்பட்டது; ("ஏற்பதிகழ்ச்சி", "உரவோரென்கை யிரவாதிருத்தல்," "இன்றுமைவேண்டி னிரவெழுக", "நாவிற்கு, இரவி னிளிவந்த தில்", "பல்லெலாந்தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச், சொல்லெலாஞ்சொல்லிநாட்டித் துணைக்கரம்விரித்து நீட்டி, மல்லெலாமகலவோட்டி மானமென்பதனைவீட்டி, இல்லெலாமிரத்த லந்தோ விழிவிழி வெந்தனூன்றும்" என்றார் பிறரும்.)

ஊங்குஎன்பது - மிகுதிப்பொருளதோர் இடைச்சொல்; இவ்வதிகாரத்திலுள்ள முதுமொழிகள்பத்திலு மிருக்கின்ற 'இன்'உருபிற்கு ஒப்புப்பொருள்கொள்ளுதலினும் எல்லைப்பொருள்கொள்ளுதல் சிறப்பென்பதை இது கொண்டு உணரலாம். இளிவரவு - அவமானம்வரத்தக்க செயல்; தொழிலாகுபெயர். 'எளிவரவு' என்றும், 'இழிவரவு' என்றும் பாடமுண்டு. 'ஊஉங்கு' என்பதில், அளபெடை - செய்யுளோசைநிறைக்க வந்தது; இவ்வுயிரளபெடைக்கு மாத்திரை - மூன்று. இவ்வளபெடையின்றி விரித்தல்விகாரங்கொண்டு 'இரத்த லின்னூங் கிளிவர வில்லை' என்றும், 'இரத்தலினூங்காம்' என்றும் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

(பழையவுரை.) எ - து. இரந்துஉயிர்வாழ்தலின்மேற் கீழ்மை யில்லை; எ - று.—[இளிவரவு - ஏளனம்.] (௯)

10.—(இ - ள்.) இரப்போர்க்கு ஈதலின் - யாசிப்பவர்க்குக் கொடுத்தலைக்காட்டிலும் அதிகமாக, எய்தும் சிறப்பு இல்லை - (ஒருவர்) அடையும் மேன்மை இல்லை; (எ - று.)

இரப்பவர்க்குஈதல் இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்ணியத்தையும் விளைத்து மேம்படுதலால், இங்ஙனங்கூறப்பட்டது. "மேதினியில்,

* 'பிறப்பதோராக்கம்' என்று பிரதிபேதம்.

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்", "ஐயமிட்டுண்", "இன்னுயிரேனுங், கொள்வதுதீது கொடுப்பதுநன்றால்", "ஈந்தவரல்ல இருந்தவர்யாரே" என்றார் பிறரும்.

'இரப்போர்' என்பதில், பகரவிடைநிலை-எதிர்காலமுணர்த்தாது தன்மையுணர்த்திற்று.

(பழையவுரை.) எ - து. இரப்போர்க்குக்*கொடுப்பதின்மிக்கதாய் எய்தும் மேன்மை யில்லை; (எ - று.) (௬0)

## இல்லைபத்து முற்றிற்று.

---

ஏழாவது

## பொய்ப் பத்து.

இப்பகுப்பிலுள்ள முதுமொழிகள்பத்தும் 'பொய்' என்ற சொல்லைக் கொண்டனவாய்,பொய்யாகின்றபொருளை யுணர்த்துதலால்,இதற்கு 'பொய்ப்பத்து' என்று பெயராயிற்று. பொய்யைக்கூறும் பத்து என இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. ('பொய்யாப்பத்து' என்று சிலபிரதிகளிற் காணப்படுவது பொருத்தமுடையதன்று.)

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனித ரெல்லாருள்ளும்,—பேர் அறிவினோன் - சிறந்த அறிவையுடையவன், இனிது வாழாமை - இன்பமடைந்துவாழாதிருத்தல், பொய் - பொய்யாம்; (எ - று.)

பேரறிவினோன் - கல்விகேள்விகளினாலாகிய அறிவோடு உண்மையறிவையு முடையவன். அவன் அகத்தும் புறத்தும் இம்மையிலும் மறுமையிலும் இன்பமடைந்து வாழ்வ னென்பது கருத்து. 'வாழாமை பொய்' என எதிர்மறைமுகத்தாற்கூறியது, வாழ்வனென்பதை வற்புறுத்தும். இனிது - வினையுரி.

(பழையவுரை.) எ - து. ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்து எல்லாமக்களுள்ளும், ஒருவன் பேறறிவுடையனாயின் அவன் மனத்தால்இன்புற்றுஒழுகாமை பொய்; எ - று.—[பேரறிவு - மூதறிவு.] (௬௧)

2.—(இ - ள்.) பெருஞ் சீரோன் - மிக்கசெல்வத்தையுடையவன்,தன் - தன்னிடத்து, வெகுளி இன்மை - கோபமில்லாதிருத்தல், பொய் - பொய்யாம்; (எ - று.)

மிக்கசெல்வத்தைப்பெற்றவன் கோபகுணமுடையனாயிருத்தல் பெரும்பாலும்உலகவியல் பாதலால், இங்ஙனங் கூறினர்: அது சிறப்பன் றென்க. வெகுளி - 'இ'விகுதிபெற்ற தொழிற்பெயர். 'தன்' என்பது இல்லாமல் 'பெருஞ்சீரோன்வெகுளியின்மை' என்றும் பாடமுண்டு.

(பழையவுரை.) எ-து. பெருஞ்செல்வத்தைப்பெற்றானொருவன் வெகுளாமை பொய்; எ - று.—[வெகுளி - கோபம்.] (௬௨)

3.—(இ - ள்.) கள் உண்போன்-கள்ளைக்குடிப்பவன்,சோர்வு இன்மை-ஒழுக்கமும் உணர்வும் ஒழித லில்லாதிருத்தல், பொய்-பொய்யாம்; (எ - று.)

மதுபானஞ்செய்பவன் அறிவொழுக்கங்களழிந்தவனாவ னென்பது கருத்து. இது, பஞ்ச மகாபாதகங்களி லொன்றாம்; அவையாவன - கொலை, பொய், களவு, கட்குடித்தல், குருநிந்தை என்பன.

---

* 'கொடுப்பதின்மிகத் தாம் எய்தும் மேன்மை' என்று பிரதிபேதம்.

(பழையவுரை.) எ - து. கள்ளையுண்போன் ஒழுக்கஞ்சோர்வின்மை பொய்; எ - று. (௬௩)

4.—(இ - ள்.) காலம் அறியாதோன் - (தன்முயற்சிபயன்படுதற்கு ஏற்ற)காலத்தை யறியாது தொடங்குபவனது, கை - தொழில், உறல்-சித்தியடைதல், பொய் - பொய்யாம்; (எ - று.)

"அருவினையென்ப வுளவோ கருவியாற், காலமறிந்துசெயின்" என்றபடி காலமறிந்துமுயன்றால்மாத்திரமே தொழில் கைகூடுமென்க.

(பழையவுரை.) எ - து. காலமறிந்து*முயலாதோன்கருமம் முடிதல் பொய்; எ - று.—[கையுறல் - கருமம்முடித்தல்.] (௬௪)

5.—(இ - ள்.) மேல் வரவு அறியாதோன்-எதிர்காலத்தில்வரும் இடையூற்றை முன்பு ஆராய்ந்து அறிந்துகொள்ளாதவன், தன் காத்தல் - தன்னைத் தான் பாதுகாத்துக்கொள்ளுதல், பொய் - பொய்யாம்; (எ - று.)

ஒருவன் வருமுன்காப்பவனு யிராமல் வருங்காற்காப்பவனுகவாவது வந்தபின்காப்பவனுகவாவது இருந்தால், அவனுக்கு, தன்னைத் தான் பாதுகாத்துக்கொள்ளமுடியாதபடி பெருந்தீங்குவிளைந்திடுமென்பது கருத்து. "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்,வைத்தூறுபோலக் கெடும்" என்றார் திருக்குறளிலும்; "அறிவுடையா ராவதறிவா ரறிவிலா, ரஃதறிகல்லாதவர்" என்றதும் இதுபற்றியே.

'மேல்' என்பது - எதிர்காலம்நோக்கிற்று.

(பழையவுரை.) எ - து. எதிர்காலத்துவரும்இடையூறறியாதான் தனக்குஅரண்செய்துகாத்தல் பொய்; எ - று.—[அரண் - காப்பு.] (௬௫)

6.—(இ - ள்.) உறு வினை காய்வோன் - கைகூடும்படியான தொழிலைச் செய்தற்கு வெறுப்புக்கொண்டவன் [அத்தொழிலைச் செய்யாதுவிட்டவன்], உயர்வு வேண்டல் - (தான்) மேன்மையடையவிரும்புதல், பொய் - பொய்யாம்; (எ - று.)

உறு வினை-தனதுதிறத்திற்குஏற்றசெயல், வாய்க்குந்தொழில்: வினைத்தொகை. அவ்வகைத்தொழிலை வெறுக்காமற் செய்தவன் மேன்மையடைவனே யன்றி அதனை வெறுத்துச் செய்யாதுவிட்டவன் மேன்மையடைதலில்லை; ஆதலால், அங்ஙனம்வெறுப்பவன், தனக்குமேன்மையுண்டாதலை விரும்புபவனென்று எண்ணத்தக்கவனல்லனென்பதாம். உண்மையாகத் தான் மேன்மையடையவிரும்புபவனுயின் உறுவினையைக் காயானென்க. வினை காய்வோன் - தொழில்செய்தற்கு மெலிபவனெனினுமாம். 'உறு வினைக்காய்வோன்'என்றும் பாடம் காணப்படுகின்றது; அதற்கு—வினைக்கு ஆய்வோன் என்றுபிரித்து - தக்கதொழிலைச்செய்தற்கு மெலிபவனென்று பொருள்கொள்ளலாம்: "ஓய்த லாய்தல் நிழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்" என்ற தொல்காப்பியத்தால், ஆய்தல் மெலிதலாதலுணர்க; சீவகசிந்தாமணியில் "ஆய்மயில்" என்றது, விசைகுறைந்தமயிலென்றபொருளில் வந்துள்ளது. 'உறு வினை' என்பது - மிக்க தொழிலென்றபொருளில் உரிச்சொல்தொகாநிலைத்தொடராம். 'உறுவினைக்கயர்வோன்' என்ற பாடம், வினைக்கு அயர்வோன் என்றுபிரிந்து,சிறந்ததொழிலைச் செய்தற்குச் சோம்புபவனென்றுபொருள்படும். அவனுக்குஉயர்வுநேராமை, வெளிப்படை: "சோம்பித்திரியேல்," "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்றார் ஔவையாரும். 'உயர்வேண்டல்' என்ற பாடத்துக்கு - உயர்என்பது முதனிலைத்தொழிற்பெயரெனவேண்டும்.

---

* 'முயலாதோன் கருமமுடித்தல்' என்று பிரதிபேதம்.

(பழையவுரை.) 'உறுவினைக்கயர்வோன்'என்பது பாடம். எ-து.*மிக்க கருமஞ்செய்கைக்கு மடிந்திருப்போன் தனக்குஆக்கம்வேண்டுதல் பொய்; எ - று.—[அயர்வு - மடிதல், சோர்வு. ஆக்கம் - செல்வம்.] (சுசு)

7.—(இ - ள்.) சிறுமை நோனாதோன் - (பிறர்க்குத் தான்செய்யும்)பணிவைப் பொறாதவன், பெருமை வேண்டல் - (தனக்குப்) பெருமையுண்டாக வேண்டுமென்று விரும்புதல், பொய் - பொய்யாம்; (எ - று.)

பிறரிடம் தான் பணிவுகொண்டொழுகுபவனுக்கே பெருமையுண்டாகுமாதலால், உண்மையாகத் தனக்குப் பெருமையுண்டாதலை வேண்டுபவன் பிறரிடம் பணிவுபூண்டொழுகக்கடவன் என்பதாம். பிறர்க்கு மரியாதைசெய்தால் தனக்குமரியாதைகிடைக்கு மென்க. "பணியுமாம் என்றும்பெருமை", "பெருமை பெருமிதமின்மை","பெருக்கத்து வேண்டும் பணிதல்", "கல்வியுடைமைபொருளுடைமை யென்றிரண்டு,செல்வமுஞ் செல்வ மெனப்படும்- இல்லார்,;குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும், தலைவணங்கித் தாழப்பெறின்" என்பன காண்க. இனி, 'சிறுமைநோனாதோன்' என்பதற்கு - (தனக்குப் பிறர்செய்த) குற்றங்களைப் பொறாதவனென்றும் பொருள்கொள்ளலாம்; "சிறியோர்செய்தசிறுபிழையெல்லாம், பெரியோராயிற் பொறுப்பதுகடனே"என்றார் பிறரும்.

நோனாதோன் - எதிர்மறைவினையாலணையும் பெயர்; நோன் - பகுதி.

(பழையவுரை.)எ-து. † பிறர்க்குத் தான்செய்யும் பணிவினைப் பொறாதோன் தனக்குப்பெருமைவேண்டுதல்பொய்; எ - று.—[நோன்றல் - பொறுத்தல்.] (சுஎ)

8.—(இ - ள்.) பெருமை நோனாதோன் - பெருந்தன்மையை மேற்கொள்ளாதவன், சிறுமை வேண்டல் - பணிவை விரும்புதல், பொய் - பொய்யாம்; (எ - று.)

பெருமைக்குணத்தையேற்றுக்கொண்டொழுகுபவனே பிறரிடம் பணிவுடையனாயிருப்பனென்பது கருத்து. முந்தினவாக்கியத்திற்கூறிய கருத்தையே அதற்குஎதிரிடையானவாய்பாடுகொண்டு கூறி விளக்கினர், வற்புறுத்துதற்பொருட் டென்க. நோனாதோன் - வகியாதவன்; நோன்றல் - தரித்தல். இனி, இதற்கு - செருக்குக்கொள்ளாதவன் அற்பகுணத்தை விரும்புதலில்லை யென்னுங் கருத் தமையவும் உரைகூறலாம்.

(பழையவுரை.) எ - து. பிறர்க்குத்தான் அரியனும் பெருமைவேண்டாதான் தனக்குச்சிறுமைக்குணம்வேண்டுதல் பொய்; எ - று. (சுஅ)

9.—(இ - ள்.) பொருள் நசை வேட்கையான் - பொருளாசைக்குக்காரணமான பற்றை யுடையவன், முறை செயல் - நீதிநடத்துதல், பொய் - பொய்யாம்; (எ - று.)

'வேணவா'என்ற தொடர்க்குப் புணர்ச்சிவிதி கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தி னுரையில் நச்சினார்க்கினியர் 'வேட்கையாவது - பொருள்கள் மேல்தோன்றும் பற்றுள்ளம்; அவாவாவது - அப்பொருள்களைப்பெறவேண்டுமென்று மேன்மேல்நிகழும் ஆசை: எனவே, வேட்கையா லுண்டாகிய அவா என மூன்றனுருபுவிரிந்தது. இதனை வேட்கையும் அவாவும் என அல்வழி யென்பாரு முளர்'என்று கூறியிருக்கின்றனர். அதனைத்தழுவி, இங்கு,

---

* 'தக்ககருமம்' என்று பிரதிபேத முண்டு. பிறர்க்குத்தான்செய்யும் பண்புமிக்ககரும மென்று சிலசொற்கள் சிலபிரதிகளில் மிகையாகக் காணப்படுகின்றன.

† 'பிறர் தனக்குச்செய்யும் பணிவினைப் பொறாதோன்' என்று பிரதிபேதம்.

நசையை ஆசையாகவும்,வேட்கையைப் பற்றுள்ளமாகவுங் கொண்டு,நசைக்குக்காரணமான வேட்கையை யுடையவ னென்று உரைக்கப்பட்டது;இனி, நசையையும் வேட்கையையு முடையவ னென்றுங் கொள்ளலாம். எனக்கு இதுவேண்டுமென்னும் விருப்பம் அவா வெனவும், அதுபற்றி அப்பொருளினிடத்தேசெல்லும் விருப்பமிகுதி ஆசை யெனவும் கூறுதலு முண்டு; அங்ஙனங்கொண்டால், பொருளவாவினுலாகும்ஆசையையுடையவ னென்னலாம். இனி, 'நசை வேட்கை' என்பதை ஒருபொருட்பன்மொழியெனக் கொண்டு, பொருளினிடத்து மிக்கஆசையையுடையவ னென்றலு மொன்று. எங்ஙனமாயினும், அரசனும் அவனுக்குக்கீழ்ப்பட்டவரு மாகிய அதிகாரிகள் பொருளாசையுடையராயிருந்தால் நடுவுநிலைமைதவருது நீதிநடத்தமாட்டா ரென்பது கருத்து.

வேட்கை - தொழிற்பெயர்; வேள் - பகுதி, கை - விகுதி, ளகரம் டகரமானது - சந்தி. 'வேட்கையோன்' என்பதும் பாடம்.

(பழையவுரை.) எ - து. பொருள்நசையால்வரும் வேட்கையையுடையான் முறைசெய்தல் பொய்; எ - று.—[நசை-இச்சை. வேட்கை - ஆசைப்பெருக்கம். முறை - நீதி.] (௯)

10.—(இ - ள்.) வாலியன் அல்லாதோன் - மனத்திற்பரிசுத்தியுடையவனல்லாதவன், தவம் செய்தல் - தவத்தைச் செய்தல், பொய் - பொய்யாம்.

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி, மறைந்தொழுகு மாந்தர் பலர்" என்றபடி மனத்திற் காமவெகுளிமயக்கங்களை யுடையராய்ப் புறத்தே துறவிவேடம்பூண்டிருப்பவர் செய்யுந் தவம் தவமாகாது என்பதாம். மனத்தூய்மையே தவச்சிறப்புக்கு இன்றியமையாதெங்க. வால் - சுத்தி; (இதன்எதிர்மொழி - வாலாமை யென வழங்கும்:) அதனையுடையவன் வாலியன்; இ - சாரியை.

(பழையவுரை.) எ - து. மனத்தின்கண்தூயனல்லாதோன் தவஞ்செய்தல் பொய்; எ - று.—[வாலியன் - தூயன், பரிசுத்தன்.] (௰)

பொய்ப்பத்து முற்றிற்று.

---

எட்டாவது

## எளிய பத்து.

இப்பகுப்பிலுள்ள முதுமொழிகள்பத்தும் 'எளிது' என்ற சொல்லைக் கொண்டனவாய், எளியபொருள்களைக்கூறுதலால், இதற்கு 'எளியபத்து' என்று பெயராயிற்று; இரண்டனுருபும் பயனு முடன்தொக்க தொகை. எளிய - பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனிதரெல்லாருள்ளும்,—புகழ் வெய்யோர்க்கு - கீர்த்தியை விரும்பியவர்க்கு, புத்தேள் நாடு எளிது - தேவலோகம்பெறுதல் எளியதாம்; (எ - று.)

இம்மைப்பயனாகிய புகழைப் பெறக்கருதித் தானதருமங்களாகிய ஸத்காரியங்களைச் செய்தவர்களுக்கு, அந்நல்வினைப்பயனால், மறுமையிற் சுவர்க்கம்முதலிய தேவலோகங்களில் வாழ்வு எளிதில்வாய்க்கு மென்பதாம். புறநானூற்றில் "புலவர்பாடும்புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி, யெய்துபவென்ப தஞ்செய்வினைமுடித்து" என்றமை காண்க. தேவர்கள் தாமேவந்து அந்நல்வினையாளரை வலிய விமானத்திலேற்றி உய

சரித்தூஅழைத்துச்செல்வ ரென்பது தோன்ற,'புத்தேள்நாடு எளிது'எனப் பட்டது. அப்புண்ணியவான்கள் இத்தகையமேன்மைபற்றித் தேவர்களி னுஞ் சிறப்ப ரென்பது தோன்றத் திருக்குறளில்"நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப், போற்றாது புத்தேளுலகு" என்றதும் காணத்தக்கது.

வெய்யோர் - "வெம்மை வேண்டல்" என்ற தொல்காப்பியத்தின்படி விருப்பத்தையுணர்த்துகின்ற வெம்மையென்னும் உரிச்சொல்லடியாப் பிற ந்தபெயர்;பண்புப்பகுதி ஈறுபோய் முன்னின்றமகரமெய் யகரமாத்திரிந்தது: (புறநானூற்றில் "விறல்வெய்யோன்"என்றது வெற்றியை விரும்புபவனெ ன்றும், புறப்பொருள்வெண்பாமாலையில் "அமர்வெய்யோன்"என்றது போ ரைவிரும்புபவ னென்றும் பொருள்படுத லுணர்க.) புத்தேள்-சாதிப்பெயர்.

(பழையவுரை.) எ - து. ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்து மக்களெல் லாருள்ளும், ஒருவர்க்குப் புகழ்விரும்பின் கடவுளர்வாழுநாடு பெறுத லெளி து; எ - று.—[வெய்யோன் - விரும்பினவன்.] (௭௧)

2.—(இ - ள்.) உறழ் வெய்யோருக்கு - (பிறரோடு) மாறுபடுதலை விரு ம்புபவர்க்கு, உறு செரு எளிது - மிக்க போர் எளியதாம்; (எ - று.)

பலரோடும் பகைத்து மாறுகும் கலககுண முடையார்க்கு எங்கும் பெருஞ்சண்டை நேரு மென்பதாம்; ஆகவே, "தன்பத்துள் துன்பம்"ஆகிய இகல்என்னும் அத்தீக்குணத்தைக் கொள்ளலாகா தென்க.

உறழ் - உறழ்தல்; முதனிலைத்தொழிற்பெயர். உறுசெரு - உரிச்சொல் தொடர்.

(பழையவுரை.) எ - து. பிறரோடு கலகம்விரும்புவார்க்கு, மிக்கசெரு எளிது; எ - று.—[உறழ் - கலகம். செரு - போர்.] (௭௨)

3.—(இ - ள்.) ஈரம் வெய்யோர்க்கு - (மனத்தில்) அன்புடைமையை விரும்பியொழுகுபவர்க்கு, நசை கொடை எளிது - (பிறர்)விரும்பிய பொ ருளைக் கொடுத்தல் எளியதாம்; (எ - று.)

"அன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு" என்றபடி அன்பையுடைய வர் பிறர்விரும்புபவற்றை அவர்க்கு மகிழ்ச்சியுடன் எளிதிற்கொடுப்பர் என் பதாம். முன்னும் (௧௨.)"ஈரமுடைமை யீகையினறிப" என்றார்.

நசை - விருப்பம்; விரும்பப்பட்டபொருளுக்கு ஆகுபெயர். கொடை— 'ஐ'விகுதிபெற்ற தொழிற்பெயர். 'நாமம்வெய்யோர்க்குநசைகொடையெ ளிது' என்றும், 'நாமம்வெய்யோர்க்குநசைகுலைவெளிது' என்றும் பாடமு ண்டு; முந்தினதற்கு - பேர்பெறவிரும்புபவர்க்கு அன்போடுகொடுத்தல்எளி யது என்றும், பிந்தியதற்கு - (பழிபாவங்களுக்கு)அஞ்சுதலை விரும்பியவர் க்கு ஆசையொழிதல் எளிது என்றும் பொருள்காணலாம்: பெயரைக்குறிக் கும்போது, நாமம் - வடசொல்; அச்சத்தைக்குறிக்கும்போது, 'நாம்' என்ற உரிச்சொல்லின்மேல் 'அம்' - சாரியை.

(பழையவுரை.) எ-து. மனத்துள் ஈரத்தை விரும்பியிருப்பார்க்கு, பிற னொருவன்நசைகெடக்கொடுத்தல் எளிது; எ - று.—[நசை கொடை-ஆசை யைக் கொடுத்தல்.] (௭௩)

4.—(இ - ள்.) குறளை வெய்யோர்க்கு - (பிறர்மேற்) கோள்சொல்லு தலை விரும்புபவர்க்கு, மறை விரி எளிது - பிறர்மறைவாகச்செய்தசெயல் களை வெளிப்படுத்திப் பலரும்அறியச்செய்தல் எளியது; (எ - று.)

கோள்சொல்லுங்குணமுடையவர் பிறரதுஅந்தரங்கங்களைப் பகிரங்க மாக்குவ ரென அவரதுபொல்லாங்கு கூறியவாறும். மறை - மறைவானது, இரகசியம். விரி - விரித்தல்: முதனிலைத்தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ - து. * குறளைச்சொல்லை விரும்புவார்க்கு,ஒருவன் மறையச்செய்ததொன்றனை வெளிப்படுத்திப் பிறரையறிவித்தல் எளிது; எ - று.—[குறளை - கோள்.] (எச)

5.—(இ - ள்.) துன்பம் வெய்யோர்க்கு - (ஒருகாரியத்தைக்குறித்துச் செய்யும்முயற்சியாலாகுந்)துன்பத்தை விரும்பிப்பொறுத்தவர்க்கு, இன்பம் எளிது - (அக்காரியங் கைகூடுதலால்) இன்பமடைதல் எளியது; (எ - று.)

*முயற்சியாலாகுஞ்சிரமத்தைத் தளராது மேற்கொண்டவர் காரியசித்தியால்இன்பமடைவ ரென்பதாம். மறுமைக்குஉரிய முயற்சியாகிய தவவிரதங்களா லாகுந் துன்பங்களைப் பொறுத்தவர் அத்தவப்பயனாற் சுவர்க்காதிலோகங்களிலும் முத்தியுலகத்திலும் சென்று இன்பமடைதலும் இதில் அடங்கும்.*

(பழையவுரை.) எ - து. ஒன்றனை முயன்று வருந் துன்பத்தை வெருதார்க்கு.இன்பமெய்துதல் எளிது; எ - று.—[வெருதார்-விரும்புகின்றவர்.]

6.—(இ - ள்.) இன்பம் வெய்யோர்க்கு - (முயற்சிசெய்துவருந்தாமையா லாகும்) இன்பத்தை விரும்பியவர்க்கு, துன்பம் எளிது - (பொருளில்லாமைமுதலியவற்றாலாகுந்)துன்பம் எளிதில்நேரும்; (எ - று.)

*"இன்பம்விழையான் வினைவிழைவான்" என்றதற்கு மாறாகக் காரணமாகிய தொழில்முயற்சியை விரும்பாது காரியமாகிய இன்பத்தை விரும்பியவர் யாதொருநன்மையுங் கைகூடப்பெறாது வருந்துவர் என்பதாம். இனி, இதற்கு - சிற்றின்பத்தை விரும்பியவர்க்கு இம்மைமறுமைகளிற் பலவகைத்துன்பங்களும் எளிதில்நேரு மென்று பொருள்கொள்ளுதலுமாம்.*

(பழையவுரை.) எ - து முயன்றுவருந்தாமையால்வரும் இன்பத்தை விரும்புவார்க்கு, பொருளில்லாமையால் வருந் துன்பம் எளிது; எ - று.

7.—(இ - ள்.) உண்டி வெய்யோர்க்கு - உணவை மிகுதியாக விரும்பியவர்க்கு, உறு பிணி எளிது - மிக்க நோய் எளிதில்நேர்வதாம்; (எ - று.)

*தமது ஜீர்ணசக்தியின் அளவுக்கு மேற்பட உண்டவர் அஜீர்ணத்தாற் பெருநோய்களுக்கு உள்ளாகி மனமொழிமெய்கள் தம்வசப்படாதபடி மிக வருந்துவ ரென்க. ஆகையால், மிதமாகப் புசிக்கவேண்டு மென்பது கருத்து. "இழிவறிந்துண்பான்க ணின்பம்போல் நிற்கும், கழிபேரிரையான் கண் நோய்", "தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின், நோயளவின்றிப் படும்" என்ற திருக்குறள்களைக் காண்க. "மீதூண் விரும்பேல்" என்றார் ஔவையாரும். 'அளவுக்குமிஞ்சினால் அமுதமும்நஞ்சாம்' என்பது, பழமொழி, 'இரவிலும் பகலிலும் அன்னத்தை அதிகமாகப்புசிக்கலாகாது. வயிற்றில் அரைப்பங்கை அன்னத்தாலும், காற்பங்கை ஜலத்தினாலும் நிரப்பி, காற்பங்கை வாயுசஞ்சரிப்பதற்கு விடவேண்டியது. உதயாஸ்தமய காலத்திற் புசிக்கலாகாது. மத்தியான்னம்புசிப்பு விசேஷமாயிருக்குமாதில் இரவிற் புசிக்கலாகாது,' 'அதிகமாகப்புசித்தால் நோயையும் ஆயுட்குறைவையும் சுவர்க்காதிபோகக் குறைவையும் புண்ணியக்குறைவையும் உலகநிந்தையையும் உண்டுபண்ணும். ஆகையால், அதை நீக்கவேண்டியது' என்பது, நூல்களின் தேர்ந்தகொள்கை.*

*உண்டி - உண்ணப்படுவது; இ - செயப்படுபொருள்விகுதி, ட் - எழுத்துப்பேறு.*

(பழையவுரை.) எ - து. உண்டிமிகவிரும்பினார்க்கு மிக்கபிணி எளிது; எ - று.—[உண்டி - பேருணவு.] (எஎ)

---

* 'குறளைசொல்ல' என்று பிரதிபேதம்.

8.—(இ - ள்.) பெண்டிர் வெய்யோர்க்கு - மகளிரை மிகுதியாகவிரும்பியவர்க்கு, படு பழி எளிது - கொடிய பழி எளிதில்உண்டாகும்; (எ - று.)

தன்வழிநடப்பதற்குரிய மனையாளின் வழியே தானடத்தலும், பிறன் மனைவியை விரும்புதலும், வேசையரை விரும்புதலு மாகிய காமமயக்கக் கூறுபாடுகள், 'பெண்டிர்வெய்யோர்' என்றதில் அடங்கும். இத்திறத்தவர் மூவரும் பெரியவுலகநிந்தைக்கு உள்ளாவ ரென்பது வெளிப்படை. இவற்றின் தீங்குகளை. 'பெண்வழிச்சேறல்', 'பிறனில்விழையாமை,' 'வரைவின்மகளிர்', என்றஅதிகாரங்களில் விரித்துரைத்தனர் திருவள்ளுவர் திருக்குறளில்.

பெண்டிர் - பன்மைப்பெயர்; இர் - பலர்பால்விகுதி. படு பழி - மிகு பழி; படுகுழி, படுகொலை, படுபாதகன், படுபாழ், படுநீலி என்றல் வழக்கு.

(பழையவுரை.) எ - து. * பெண்டிரைமிகவிரும்பினோர்க்கு உண்டாகும் பழி எளிது; எ - று.—[பழி - நிந்தை.] (எஅ)

9.—(இ - ள்.) பாரம் வெய்யோர்க்கு - பிறர்பாரத்தைத் தாங்கவிரும்பியவர்க்கு, பாத்து ஊண் எளிது - (பிறர்க்குப்) பகுத்துக்கொடுத்து (மிச்சத்தைத் தாம்) உண்ணுதல் எளிதில்நிகழும்; (எ - று.)

பாரம் வெய்யோர் - பிறர்க்குஆகவேண்டியகாரியங்களைத் தாம் மேற்கொள்பவர். பாரம் - சுமை; வடசொல்: அதனை வகிக்கவிரும்புபவர், பாரம் வெய்யோர். பாத்து ஊண் - பிரமசாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி என்னும் மூன்றுஆச்சிரமத்தார்க்கும், அகதி தரித்திரன் முதலானவர்க்கும், பித்ருக்கள் தேவர் விருந்தாளிகள் உறவினர் என்பவர்க்கும், தாம்சம்பாதித்த பொருளைப் பங்கிட்டுக்கொடுத்து, மிச்சத்தைத் தாம் அனுபவித்தல். இத்தன்மை, ஸ்வகார்யதுரந்தரரிடம் உண்டாகாது, பரகார்யநிர்வாகிகளிடத்தே இயற்கையி லமையு மென்பது கருத்து.

பாத்து என்னும் இறந்தகாலவினையெச்சத்தில், பகு என்பதன் மரூஉவாகிய பா - பகுதி. ஊண் - உண்என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ-து. † பிறர்பாரத்தைத் தாங்குதல்விரும்புவார்க்கு. பகுத்துண்டல் எளிது; எ - று.—[பாத்தல் - பகுத்தல்.] (எகூ)

10.—(இ - ள்.) சார்பு இலோருக்கு - (நல்லநண்பரைச்)சார்தலில்லாதவர்க்கு, உறு கொலை எளிது - பொருந்திய கொலைத்தொழிலைச் செய்தல் எளியது; (எ - று.)

நற்குணநற்செயல்களையுடையவரோடு இணங்குத லில்லாமல் தீக்குணத்தீச்செயல்களையுடையவரோடுஇணங்குபவர் அந்தச் சகவாசதோஷத்தாற் கொலைமுதலியகொடுந்தொழில்களைத் துணிந்துசெய்வ ரென்பது கருத்து. சார்பு - 'பு'விகுதிபெற்ற தொழிற்பெயர். இனி, இதற்கு - உறவினத்தாரோடு தொடர்பில்லாதவர்க்கு மிகவுங்கொலைத்தொழில்செய்தலெளிதென்று உரைப்பினுமாம்; சுற்றமற்றவர் பழிக்குஅஞ்சாது கொடுமைசெய்வ ரென்பது கருத்து: "அற்றாரைத் தேறுதலோம்புக மற்றவர், பற்றிலர் நாணார் பழி" என்ற திருக்குறள் இவ்வுரைக்கு மேற்கோளாகத்தக்கது. 'சால்பிலோருக்கு' என்ற பாடத்துக்கு - நற்குணங்கள்நிறைதலில்லாதவர்க்கு என்பது பொருள்; சால்பு - குணபூர்த்தி.

---

* 'பெண்டிரை விரும்பி அவர்சொல்வழிவருவார்க்குப் படும்பழி எளிது' என்று பிரதிபேதம்.

† 'பெருமையை விரும்பினோர்க்கு, பகுத்துண்ணல் எளிது' என்று பிரதிபேதம்.

(பழையவுரை.) எ-து. * நன்னட்பைச்சாராதோர்க்கு, பொருந்திய கொலைத்தொழில்செய்த லெளிது; எ - று.—['சால்பிலோருக்கு' என்றும் பாடம்; சால்பு - பெருந்தன்மை.] (அ0)

எளியபத்து முற்றிற்று.

---

ஒன்பதாவது

## நல்கூர்ந்த பத்து.

இப்பகுப்பிலுள்ள பத்துமுதுமொழிகளும் 'நல்கூர்ந்தன்று' என்றசொல்லைக் கொண்டனவாய், வறுமையடைந்தபொருள்களை யெடுத்துக்கூறுதலால், இதற்கு 'நல்கூர்ந்தபத்து' என்று பெயராயிற்று. நல்கூர்ந்தவற்றைக் கூறும்பத்து என இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. நல்கூர்ந்த - தெரிநிலை யிறந்தகாலப் பலவின்பால்வினையாலணையும்பெயர். நல்கூர்தல்—[நீதிநெறிவிளக்கம் - 2 - உரை.] 'நல்கூர் பத்து' என்று பிரதிபேதமுண்டு.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்-கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனித ரெல்லார்க்கும்,—முறை இல் அரசன் நாடு - நீதி நெறியில்லாத அரசனது நாடானது, நல்கூர்ந்தன்று - வறுமையடைந்தது.

("இயல்புளிக்கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும்விளையுளுந் தொக்கு" என்றபடி) நீதிநெறிமுறைதவறாது செங்கோல்நடத்தும் அரசனது நாடு காலமழையையும் அதனாற்குன்றாதவிளைவையுமுடையதாய் வளம்சுரக்க, அந்நெறிதவறிக்கொடுங்கோல்செலுத்தும்அரசனது நாடு("முறைகோடி மன்னவன்செய்யி னுறைகோடி, யொல்லாது வானம்பெயல்" என்றபடி) காலமழையின்றி வளஞ்சுரவாது வறுமைப்படு மென்பது கருத்து.

(பழையவுரை.) எ - து. ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்து எல்லாமக்கட்கும்,முறைமைசெய்யாவரசன்நாடு வறுமையுறும்; எ - று.—[நல்கூர்தல்-வறுமைப்படல்.] (அக)

2.—பரீக்ஷைக்குப் பாடமில்லை.

3.—(இ - ள்.) செற்று உடன் உறைவோனை - (தன்மீது) மனத்திற் பகைமைகொண்டேவெளிக்குநண்பன்போன்றுஉடன்வசிப்பவனை,சேர்தல்-நண்பனுகக்கொண்டொழுகுதல், நல்கூர்ந்தன்று-வறுமைதருவதாம்; (எ-று.)

வெளிக்குப்பகைமைதோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தல்பற்றி, உட்பகைவராதுசேர்க்கை பொருளிழவுமுதலிய பல தீங்குகளை யுண்டாக்குமாதலால், அவ்வகப்பகைவர் அணையாமலும் அவர்க்குத் தாம் உடன்படாமலும் இருத்தல்வேண்டு மென்பதாம். "உடம்பாடிலாதவர்வாழ்க்கை குடங்கருட், பாம்போடு னுறைந்தற்று" என்றார் திருவள்ளுவரும்.

செற்று-செறு என்றபகுதியின் இறந்தகாலவினையெச்சம்; பகுதி இடையொற்றுஇரட்டி இறந்தகாலங்காட்டிற்று: விகுதிஉகரம்புணரும்போது பகுதியீற்றுஉகரம்கெட்டது, சந்தி. 'உறைவோரை' என்று பன்மையாகவும் பாடமுண்டு.

(பழையவுரை.) எ - து. தன்னைச் † செறுத்தொழுகுவானைச் சென்றடைதல் வறுமையுறும்; எ - று.—[செறல்-கெடுத்தல்.] (அ௩)

---

* 'சால்பிலோர்க்கு' என்று பாடம். 'அமைந்தகுணமில்லாதார்க்கு மிகவும்உயிர்க்கொலை யெளிது' என்று பிரதிபேதம்.

† 'செறுத்தொழுகுவாரை' என்று பிரதிபேதம்.

4.—(இ - ள்.) பிணி கிடந்தோன் பெற்ற இன்பம் - வியாதியடைந்து தன்வசமிழந்தவன் அடையும் இன்பம், நல்கூர்ந்தன்று - வறுமையடைந்தது.

நோயாளிக்கு இன்பமில்லையென்பது கருத்து. (அவன் சிற்றின்பமுறுவனாயின் அது பெருந்துன்பத்துக்குக்காரணமாமென்றலும் அமையும்.) கிடத்தல் - சுவாதீனமின்றியிருத்தல், படுத்திருத்தல்.

(பழையவுரை.) எ - து. பிணிப்பட்டஉடம்பை * யுடையான்நுகரும் காமவின்பம் வறுமையுறும்; எ - று. (அச)

5.—(இ - ள்.) தன் போற்றா வழி - தன்மேல்அன்புடையராய்த் தன்னைப் பாதுகாவாதவர்மேல், புலவி - பிணங்குதல், நல்கூர்ந்தன்று - வறுமையடைந்ததாம்; (எ - று.)

புலவி - புலத்தல்; 'வி'விகுதிபெற்ற தொழிற்பெயர்: புலத்தலாவது - தன்னுடன் கூடியொழுகுபவர்மேல் ஏதேனுமொருகாரணம்பற்றி மனஸ்தாபப்படுதல். அன்புடையார்பக்கல் ஒருகால் பிணக்குக்கொண்டால் அதனை அவர் தக்கபடிபரிகரிப்ப ராதலால், அப்பிணக்கு நன்மையாய்முடியும்: அன்பின்றித்தன்னைப்பேணாதவர்பக்கல் புலவிகொண்டாலோ அதற்கு அவர் அஞ்சிப் பரிகாரஞ்செய்யா ராதலால், அந்தமனஸ்தாபம் நன்மையைவிளைக்காமற் பகைமையாய்முடியு மென்பதாம். (ஆடவரும்மகளிரும்கூடியொழுகும் இன்பநிலையில் அவ்வின்பத்தைமிகுவித்தற்பொருட்டு ஒருவர்மீது ஒருவர் சிறுகோபங்கொள்ளுத லாகிய பிரணயகலகத்துக்கும் 'புலவி'என்று பெயருண்டு; அன்புடையார்பக்கல் அதனைக்கொண்டால் அவர் அதற்கு நொந்து ஆசைமிகுதியால் அதனை உடனே பரிகரிப்ப ராதலின், இன்பம் சிறக்கும்: அன்பில்லாதவிடத்தோ அது இன்பந்தராது என்னுங் கருத்தை இம்மூதுமொழிக்கு அமைத்தலுமாம்: "நீரும் நிழல தினிதே புலவியும், வீழுநர்கண்ணே யினிது" என்றார் திருவள்ளுவரும்)

(பழையவுரை.) எ - து. தன்மேலன்பாற்போற்றாதார்திறத்துப் புலக்கும் புலவி வறுமையுறும்; எ - று.—[புலவி - பிணக்கு.] (அரு)

6.—(இ - ள்.) முதிர்வு உடையோன் மேனி அணி - கிழத்தனமுடையவன் (அலங்காரத்தின்பொருட்டு உடம்பில்) அணியும் ஆபரணம், நல்கூர்ந்தன்று - வறுமைப்படும்; (எ - று.)

கட்டிளமையுடையார் உடம்பில்அணிகலமணிந்தால் அது அவர்க்குச் செயற்கையழகுசெய்து சிறக்கும்; பிராயம்முதிர்ந்தவர் அணிந்தாலோ அது அவர்க்கு அழகுதராது விகாரப்படுத்தும் என்பது கருத்து. அணி - அணியப்படுவது; காரணக்குறி.

(பழையவுரை.) எ - து. மூத்தவுடம்பினையுடையான் அணியும் அணி வறுமையுறும்; எ - று. (அசு)

7.—(இ - ள்.) சொல் செல்லாவழி - தன்வார்த்தை சென்று பயன் தராதவிடத்து, சொலவு - (ஒன்றைச்)சொல்லுதல், நல்கூர்ந்தன்று - வறுமையடைந்ததாம்; (எ - று.)

தன்பேச்சை நன்குமதிப்பவரிடத்து ஒன்றைச்சொல்லுதல் கௌரவமாகுமே யன்றி அதனைலக்ஷ்யஞ்செய்யாதவரிடத்து ஒன்றைச்சொல்லுதல் வீண்பட்டு அவமதிப்பைத் தரு மென்பதாம். சொலவு - தொழிற்பெயர்; அ - சாரியை.

---

* 'உடையானுகக்கும்' என்று பிரதிபேதம்.

(பழையவுரை.) எ - து. தன்சொற்செல்லாவிடத்துச் சொல்லிய சொல் வறுமையுறும்; எ - று. (அஎ)

8.—(இ - ள்.) அகம் வறியோன் நண்ணல் - மனத்தில்நல்லஎண்ணமில்லாமற் பாழ்பட்டவனைச் சேர்தல், நல்கூர்ந்தன்று - வறுமையடைந்ததாம்.

அன்புஅருள்முதலிய நற்குண மில்லாதவனை யடைதல் நன்மைதராது என்பதாம். அகம் வறியோன்-சூனியமான மனத்தையுடையவன். வறியோனண்ணல் - இரண்டாம்வேற்றுமைத்தொகை. நண்ணல் - தொழிற்பெயர்; நண் - பகுதி, அல் - விகுதி. வறியோனண்ணனல்கூர்ந்தன்று—வந்தநகரம் திரிந்தவிடத்து, குறிலணையாத னகரமும் லகரமும் கெட்டன; [நன்-மெய்-கூஎ,எ,உ.கூ.] அகம் வறியோன் அண்ணல் நல்கூர்ந்தன்று என்றுபிரித்து, நல்ல சிந்தனையில்லாத பாழ்மனமுடையவன் பாராட்டும் பெருமை வறுமையின் பாற்படும் [பழுதுபடும், இகழத்தக்கதாம்] என்று உரைப்பினும் அமையும். 'அகமறியோனண்ணல்' என்றும் பாடமுண்டு; அகம்அறியோன் நண்ணல் - தன்மனத்தின்இயல்பையறியாதவனைச் சேர்த லென்று பொருளாம்.

(பழையவுரை.) எ - து. மனத்தில் நன்மையின்றி வறியானொருவனைச் சென்றுநண்ணுதல் வறுமையுறும்; எ - று.—[நண்ணல் - கிட்டுதல்.] (அஅ)

9.—(இ - ள்.) உட்கு இல் வழி - (பிறர்)அஞ்சத்தக்கமதிப்பு இல்லாதவனிடத்து உண்டாகின்ற, சினம் - கோபம், நல்கூர்ந்தன்று - வறுமைப்பட்டதாம்; (எ - று.)

பிறர்அஞ்சத்தக்கமதிப்புடையவன் கோபங்கொண்டால் அதற்குப்பிறர் அஞ்சியொழுகுவரே யன்றி, அத்தகையமதிப்பில்லாதவன் கோபங்கொண்டால் அது எவராலும் லக்ஷியஞ்செய்யப்படாது சிறுமைப்படு மென்பதாம். இனி, 'உட்கில்வழிச் சினம்' என்பதற்கு தன்னைக்கண்டு அஞ்சுத லில்லாதவர் மீது கொள்ளுங் கோபம் வறுமையின்பாற்படும் [பயனின்றிநிற்கும்] என்று உரைப்பினுமாம்.

(பழையவுரை.) எ - து. மதியாதார்முன் வெகுளும் வெகுட்சி வறுமையுறும்; எ - று.—[உட்கு - அச்சம்.] (அகூ)

10.—(இ - ள்.) நட்பு இல்வழி சேறல் - சிநேககுணமில்லாதவரிடத்து (ஒருதவியைப்பெறவேண்டி)ச் செல்லுதல், நல்கூர்ந்தன்று - வறுமைப்பட்டதாம்; (எ - று.)

தம்பக்கல்அன்புடைய நண்பரிடம் ஏதேனும்ஒருதவிவேண்டிச்சென்றால் அவர்'உதவுவர்; அன்றி நண்பிலர்பக்கல் உதவிவேண்டிச்சென்றாலோ அவர் அன்பின்மையாற் சிறிதும்உதவா ராதலால், அவர்பக்கல்செல்வது வீணாகி இகழ்ச்சிக்குஇடமா மென்பதாம்.

சேறல்-செல்லுதல்; தொழிற்பெயர்: செல் - பகுதி, தல்-விகுதி, பகுதி முதல்நீண்டது - விகாரம், தகரம் றகரமானவிடத்துக் குறில்செறியாத லகரங் கெட்டது - சந்தி: கோறல், வேறல், கோடல் என்பனவும் இத்தன்மையன. 'நட்பில்வழிச்செலவுநல்கூர்ந்தன்று' எனறும், 'நட்பில்வழிச்சொலவு நல்கூர்ந்தன்று' என்றும் பாடமுண்டு.

(பழையவுரை.) எ - து. தன்னொடுநண்பில்லாதார்மாட்டு ஒன்றனை நச்சிய நசை வறுமையுறும்; எ - று. (கூ0)

நல்கூர்ந்தபத்து முற்றிற்று.

---

பத்தாவது

## தண்டாப் பத்து.

இப்பகுப்பிலுள்ள பத்துமுது மொழிகளும் 'தண்டான்' என்ற சொல்லைக் கொண்டனவாய், நீங்காதபொருள்களை யுணர்த்துதலால், இதற்கு 'தண்டாப்பத்து' என்று பெயராயிற்று. தண்டாமை - நீங்காமை; அதனை யுணர்த்தும் பத்து என இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. தண்டா- நீங்காத என ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சமாகக் கொண்டு, நடுவிற்சிலசொற்கள்மறைந்திருத்தலை மத்தியமபதலோபமாக்கிப் பொருளமைத்தலுமாம்.

1.—(இ - ள்.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்-கடல்சூழ்ந்த நிலவுலகத்தி லுள்ள மனித ரெல்லாருள்ளும்,—ஓங்கல் வேண்டுவோன் - தான் மேன்மையடையவிரும்புபவன், உயர் மொழி தண்டான் - (பிறரை) மேன்மைப்படுத்திச்சொல்லுஞ் சொற்களை நீங்கான்; (எ - று.)

"பிறராற்பெருஞ்சுட்டுவேண்டுவான் யாண்டும், மறவாமேநோற்பதொன்றுண்டு - பிறர்பிறர், சீரெல்லாந்தூற்றிச் சிறுமைபுறங்காத்து, யார்யார்க் குந்தாழ்ச்சிசொலல்" என்றபடி பிறரதுமேன்மைகளைப் பாராட்டி யெடுத்துச்சொல்பவனுக்கே மேன்மையுண்டாகு மென்பதாம். பிறரையிழித்துக் கூறுபவன் தான் இழிவடைவ னென்க. உயர் மொழி - உயர்வைத்தரும் மொழி யென இரண்டனுருபும்பயனுந்தொக்கதொகை. உயர் -முதனிலைத் தொழிற்பெயர். இனி, 'உயர்மொழிதண்டான்' என்பதற்கு-மெய்ம்மொழி, இன்சொல், பயனுள்ளசொல் முதலிய உயர்ந்தசொற்களை நீங்கா னென்று உரைத்தலுமாம்; இப்பொருளில், உயர்மொழி - வினைத்தொகை: இங்ஙனம் பேசுபவன் தானே மேன்மையடைவன். இதற்குஎதிராகப் பொய்ம்மொழி, கடுஞ்சொல், பயனில்சொல் முதலிய தாழ்ந்தசொற்களைப் பேசுபவன் தாழ்வடைவ னென்பது வெளிப்படை.

ஓங்கல்-தொழிற்பெயர்; ஓங்கு-பகுதி. தண்டான்-தண்டு என்ற வினைப் பகுதியின் எதிர்மறைமுற்று. தண்டுதல் நீங்குதலென்னும்பொருளதாதலை, "தண்டாச்சிறப்பிற்றம்மின்னுயிர்" என நாலடியாரிலுங் காண்க.

(பழையவுரை.) எ - து. ஆர்கலியாற்சூழப்பட்டவுலகத்து எல்லாமக்களுள்ளும், உயர்வுவேண்டுவோன் பிறரைஉயர்த்துச்சொல்லும் மொழிகளை * மாறான்; எ - று.—[தண்டுதல் - மறுத்தல், விலக்குதல்.] (கூக)

2.—(இ - ள்.) வீங்கல் வேண்டுவோன் - தனதுஐசுவரியங்கள்பெருகுதலை வேண்டுபவன், பல புகழ் தண்டான்-பலவகையான புகழைத்தருஞ் செய்கைகளை நீங்கான்; (எ - று.)

பழித்தற்கிடமான தீயவழிகளா லுண்டாகும் இலாபம் அப்பொழுது ஆக்கம்போலத்தோன்றினாலும் செல்வம் சந்தானம் சுற்றம் முதலிய ஐசுவரியங்கள் நீடித்துவளர்தற்கு ஏதுவாகா தாதலால், 'ஐசுவரியஅபிவிருத்தியை வேண்டுபவன் புகழ்தருஞ்செயல்களைநீங்கான்' என்றார்.

வீங்கல் - தொழிற்பெயர்; வீங்கு - பகுதி. புகழ் - புகழ்தருஞ்செயலுக்குக் காரியவாகுபெயர்.

(பழையவுரை.) எ - து. ஆக்கத்தைவேண்டுவோனொருவன் தனக்குப் பலபுகழ்வருஞ் †செய்கைகளையொழியான்; எ - று.—[ஆக்கம் - செல்வம்.]

* 'மாறான்' என்று பிரதிபேதம்.

† 'செய்கை களையான்' என்று பிரதிபேதம்.

3.—(இ - ள்.) கற்றல் வேண்டுவோன் - கல்விகற்றுணர்தலை விரும்புபவன், வழிபாடு தண்டான் - (தனது ஆசிரியர்க்குச் செய்யும்) பணிவிடைகளை நீங்கான்; (எ - று.)

மனப்பூர்வமான பயபத்திவிசுவாசங்களுடன் குருசுச்ருஷைசெய்பவனுக்கே கல்வி சித்திக்குமென்பதாம். நன்னூற் பொதுப்பாயிரத்தில் மாணாக்கன்வரலாறுகூறுமிடத்து "வழிபடுவோனே, உரைகோளாளற்கு உரைப்பது நூலே" என மாணாக்கராதற்குஉரியவரில் வழிபடுபவனைக் கூறியதனோடு, பாடங்கேட்கும்முறைகூறுமிடத்து "பொழுதொடுசென்று வழிபடல்முனியான்"என்றதுமன்றி, வழிபாடுசெய்யும்வகையை "அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி, நிழலின்நீங்கான் நிறைந்தநெஞ்சமோடு, எத்திறத்துஆசான்உவக்கும் அத்திறம், அறத்தில்திரியாப் படர்ச்சி வழிபாடே" என்று விரித்தமை காண்க. மூன்னும் (அ) "கற்றலிற் கற்றுரைவழிபடுதல் சிறந்தன்று" என்றார்.

வழிபாடு - வழிபடு என்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

(பழையவுரை.) எ - து. ஒன்றனைக்கற்றல்விரும்புவோன் தன்னைக் கற்பிக்கும்ஆசிரியர்க்குச் செய்யும் வழிபாடு ஒழியான்; எ - று.—[வழிபாடு - தொண்டு.] (கூ)

4.—(இ - ள்.) நிற்றல் வேண்டுவோன் - (தனது உயிர்) அழிவில்லாத நிலையில் நிற்பதை விரும்புபவன், தவம்செயல் தண்டான் - தவஞ்செய்தலை நீங்கான்; (எ - று.)

அநித்தியமாயும் பலவகைத்துன்பங்கட்குஇடமானதாயும் உயிரினும் வேறானதாயுமுள்ள உடம்புக்கு வருத்தம்வருமென்பதுகருதி விட்டிடாமல் தவத்தைச்செய்ய,பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் அநாதியாகத்துன்பமடைந்துவருகின்ற உயிர் தத்துவஞானமுண்டாகப்பெற்று நித்தியமான முத்தியில் அழிவிலாப்பேரின்பமடைந்து வாழு மாதலால், இங்ஙனங் கூறினார்.

நிற்றல் - தொழிற்பெயர்; நில், தல் - முறையே பகுதி விகுதிகள்.

(பழையவுரை.) எ- து. பிறப்புக்கெடுத்துத் தன்னைநிலைப்பிக்கவேண்டுவோன் தவஞ்செய்தலொழியான்; எ - று.—[தவம் - நோன்பு.] (கச)

5.—(இ - ள்.) வாழ்க்கை வேண்டுவோன் - (தான் செல்வஅதிகாரங்கள்பெற்று) வாழ்தலை மேன்மேல்விரும்புபவன், சூழ்ச்சி தண்டான்-(செய்யவேண்டியகாரியங்களைக்குறித்துத் தக்கதுணைவருடன்) ஆலோசித்தலை நீங்கான்; (எ - று.)

தானே ஆராயவல்லவனாயிருந்தாலும் ஆலோசனையில்தேர்ந்த துணைவருடன் இருந்து ஆராய்தல் சிறந்த தென்க இலாபநஷ்டங்கள் முதலியவற்றை நன்றாகஆராய்ந்து தொழில்செய்பவர்க்கே, காரியம்சித்தித்தலால் நல்வாழ்வு வாய்க்குமென்பதாம். "தூக்கி வினைசெய்," "நுண்ணியகருமமுமெண்ணித்துணி" என்றார் ஔவையாரும். இனி,இனிதுவாழ்தலை வேண்டுபவன் (சாம தான பேத தண்டங்க ளாகிய)உபாயங்களைச் சமயமறிந்து செய்தலில் தவறானென்று உரைப்பினுமாம்.

வாழ்க்கை, சூழ்ச்சி என்ற தொழிற்பெயர்களில், முறையே கை, சி - விகுதிகள். 'வாழ்ச்சிவேண்டுவோன் சூழ்ச்சிதண்டான்' என்று எதுகை நயமமைந்த பாடமுங் காணப்படுகின்றது.

(பழையவுரை.) எ - து. வாழ்தலை மேன்மேலும்விரும்பியஒருவன் தான்எடுத்ததொழிலை யாராய்தலொழியான்; எ - று. (கரு)